Registered No. M-4483

Madras War Review { TAMIL 10-12-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம் வருஷம் டிசம்பர்மீ 10உ, வெள்ளிக்கிழமை இதழ் 15

மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

எல்லோருக்கும் விடுதலை

மக்கள் இனத்தையே அடிமைப் படுத்த வேண்டும் என்னும் ஆசையால் தூண்டப் பட்ட கெட்டவர்கள், யுத்தக் கொடுமை களுக்கு உலகத்தை ஆளாக்கினுர்கள். இவர்களுடைய தலையில் எழுதப்பட்டிருக் கும் கதியை மாற்றி யெழுத ஒருவராலும் முடியாது. நேச நாடுகளின் ஆதிக்கம் ஓங்குகிறது என்பதையும், அந்த ஆதிக்கத் தைக் கொண்டு நம் பொது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலா மென்பதை யும், இந்தத் தலை யெழுத்து வலியுறுத்து கிறது. நமது நோக்கங்கள்: ( ) எல்லோ ருக்கும் விடுதலை; (2) அனைவருக்கும் பொருளாதாரப் பாதுகாப்பு; (3) இனி யுத் தமே ஏற்படக் கூடாது என்பதற் கனுகுண மாக, உலக அரசியல் அமைப்பு ஒன்று ஏற் பட வேண்டு மென்று நெடு நாட்களாகக் கோரிக் கொண்டிருந்தபடி, அது கைகூட வேண்டும். நாம் மேற்கொண்டுள்ள இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு, மன உறுதியோடு முன்னேறிக் கொண்டிருக்கிறேம். அப்போது நம் நல்லெண்ணத் தை நம் செயல்களால் காட்டுகிறேம். எப்படி யென்றுல் நம்மால் மீட்கப்படுகிற நாட்டு மக்க ளுக்கு, ஜன நாயக நாடுகள் அனுபவிக்கும் உரிமைகளையும் நலன்களையும் வழங்குகிறேம். அவர் களுக்கு அடுத்துள்ள நாட்டவர்களும் உற்ற நண்பர்களா யிருப்பார்க ளென்று உறுதி கூறுகி றேம். அப்போது ஒரு நாடு மற்றொரு நாட்டின் மேல் அக்கிரமமாகப் படையெடுக்க மாட்டாது. இவற்றை சாதிக்க வேண்டி வகுத்துள்ள முறைகளின்படி, பெரிய நாடா யிருந்தாலும், சிறிய நாடாயிருந்தாலும், அங்கே அவற்றிற்குச் சம உரிமையுண்டு. நம் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளும் நெறியில் நாம் போய்க் கொண்டிருக்கிறேம். எப்படி யென்றுல் நேச நாடுகளுக் குள் அவ்வளவு ஒற்றுமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஒற்றுமையின் பயனுக இரா ணுவக் கூட்டுறவும் அரசியல் கூட்டுறவும் மேலும் மேலும் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது.

மிஸ்டர் ரூஸ்வெல்ட், டிசம்பர் 7-ம் தேதி வெளிவந்த "ஆர்மி அன் நேவல் ஜர்னல்" என்னும் பத்திரிகையின் விசேஷ வெளியீட்டுக்கு அனுப்பிய செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் ரூஸ்வெல்ட் ..	1
எல்லோருக்கும் விடுதலை	1
முரசொலி	2
விளம்பரம் : விடுதலை	2
தலையங்கம் : டேரான் மகா நாடு	3
எம். பி. இ. பட்டம் எப்படிக் கிடைத்தது ..	4
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	5
செயல் ஒன்று ; பலன் இரண்டு	5
சினிமாவும் யுத்த முயற்சியும்	6
இந்தியப் படைகளுக்கு மிருக வைத்தியர்கள் தேவை	6
ஆட்டம் க்ளோஸ்	7
முஸ்லீம் மக்களைப் பணயமாக்க ஜெர்மன் முயற்சி	8
அடிமை நாடுகள் மீள வழி	9
இரேக்க மீட்சி வேண்டுகோள்	9
படம்: மே. த. வைசிராய் பிரபுவை வரவேற்று மரியாதை குண்டுகள் போட்ட சென்னைப்படை.	10
ஜப்பான் விஷயம்	11
நம் நடும்—உணவுப் பொருளும்	11
பாட்டு : தேசியச் சேமிப்புப் பத்திரம் ..	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"ஐரோப்பாவில் யுத்தம் முடிந்த பிறகு பெரிய மூன்று அரசாங்கங்கள் ஒழிந்து விடும். இப்படிப் பட்ட நிலைமை ஏற்படுவது உண்மையிலேயே மிகவும் முக்கியமானது. இந்தக் கண்டத்தின் தற்காலச் சரித்திரத்தில் இப்படிப்பட்ட தோர் நிலைமையை நாம் ஒரு போதும் கண்ட தில்லை. பிரான்சு தொலைந்தது. அது மீண்டும் கிளம்ப வேண்டுமானால், மகா கஷ்டம். நெடுங்காலஞ் செல்லும். அப்போது தான், தலை தூக்க முடியும். அதை மகா ஆதிக்க முள்ள தென்று நாம் கூறலாம். அப்படிக் கூறுவதனால் அதற்கு எவ்வித இலாபமு மில்லை. பிரான்சு ஒழிந்து விட்டது. நம் காலத்தில் அது ஒழிந்து போய் விடும். நெடுங் காலம் வரை அது ஒழிந்து போயிருக்கும். இத்தாலி அடியோடு அழிந்து விட்டது. மீண்டும் அது ஒரு வல்லரசு ஆக முடியாமற் போகலாம். ஜெர்மனியும் தொலையும். பழைய உருவில் அது மீண்டும் தலை தூக்க முடியாமற் போகலாம். இது பற்றி ஒருவருக்கும் தெரியாது. இந்த யுத்தத்திற்குப் பிறகு அது வாங்கப் போகிற உதையின் பயனாக, ஐரோப்பாவி னின்று ஜெர்மனி அழிக்கப்பட்டு விடும். நெடு நாட்கள் வரை அது தலை தூக்க முடியாது. அதன் பிறகு ஒரு புதிய உ கம் அமையலாம். ஆகவே பிரிட்டனும் ரஷ்யாவுந் தான் மிஞ்சும். ஐரோப்பாவில் புதிய தோர் மகத்தான நிலைமை ரஷ்யா அடைந்திருக்கிறது. இந்த மகத்தான ரஷ்யா இந்தக் கண்டம் முழுவதையும் மேவி வருகிறது. மற்ற அரசாங்கங்கள் பணிந்து ஒழிந்தன. தானே இக்கண்டத்தில் பெரு மிதத்தோடு நிற்கிறது. இதனால், அதன் ஆதிக்கம் ஓங்குவது மட்டுமன்றி, மேலும் மேலும் பெருகும்.

*　　*　　*　　*　　*　　*

அப்போது புகழும், கண்ணியமும், செல்வாக்கும் இந்நாடாகிய பிரிட்டனுக்கு ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை எந்த நாட்டிற்கும் ஏற்பட்டதாகச் சரித்திர மில்லை யென்றுச் சொல்லலாம். இந்த உய ய தத்துவம், உலக சரித்திரத்தின் நுண் பொருளில் பொதிந்திருக்கிற தென்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

ஐரோப்பாவிற்கு வெளியே மற்றொரு வல்லரசான அமெரிக்கா இருக்கின்றது . . . .

இனி ஏற்படப்போகும் புதிய சர்வ தேச ஸ்தாபனத்தின் தலைமைப் பதவி இந்த மூன்று வல்லரசுகளின் வசத்திலிருக்கும்படி நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், 'எம்பையர் பார்லிமெண்டரி' சங்கத்தில் நவம்பர் மாதம் 25-ம் தேதி பேசியது.

தமிழ்ப் பெருமக்களே !

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப்பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-ம் ௵ டிசம்பர் ௴ 10௳, வெள்ளிக்கிழமை | இதழ் 15

டேரான் மகாநாடு

மகா நாடுகள் நடைபெறுகின்றன. பல தீர்மானங்கள் அங்கே நிறைவேறுகின்றன. அந்தத் தீர்மானங்களை நிறைவேற்ற இயக்கங்கள் முளைக்கின்றன. இந்த இயக்கங்கள் சில சமயங்களில் நல்ல பலன் அளிப்பதுண்டு. மற்றுஞ் சில சமயங்களில், அந்த இயக்கங்களே நசித்துப் போவது முண்டு.

சென்ற அக்டோபர் மாதத்தில், மாஸ்கோவில் ஒரு மகா நாடு நடந்தது. பல தீர்மானங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டன. அதையடுத்து நவம்பர் மாதக் கடைசியில் கெய்ரோவில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இம் மகா நாட்டிற்கு மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் ரூஸ்வெல்ட், ஜெனரலாசிமோ ஷியாங்கெய் ஷேக் ஆகிய மூவரும் விஜயம் செய்திருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நாட்டின் இராணுவத் தலைவர்களையும், அரசியல் அறிஞர்களையும் உடனழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். மிஸ்டர் சர்ச்சில் தன்னுடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக, 200 பேர்களை அங்கே திரட்டியிருந்தார். அதுபோலவே தான், ஒவ்வொரு நாட்டின் அரசாங்கத் தலைவர்களும். முற்பகல்களில், இராணுவத் தலைவர்களும் அரசியல் அறிஞர்களும் கூடிப் பேசினார்கள். இவர்களுடைய கூட்ட நடவடிக்கைகள் பிற்பகல்களில் மூன்று அரசாங்கத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டன. அவர்கள் அதைக் குறித்துப் பரிசீலனை செய்தனர். விவாதித்து பல முடிவுகள் செய்தனர். அவை எல்லாம் அரசியல் இரகசியங்கள். வெளியிடப்பட முடியாதவை. எனவே, அந்த மூன்று அரசாங்கங்களின் தலைவர்களும் சேர்ந்து, ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் ஒரு விஷயம் மட்டும் “உள்ளங்கை நெல்லிக்கனி” போல விளங்குகிறது. அந்த அறிக்கையில் ஜனநாயக நாடுகளுக்குள் தலை சிறந்த ஒற்றுமை தாண்டவமாடுகிறது. கூட்டுறவு கொந்தளிக்கிறது.

இந்த மகா நாட்டிற்குப் புறப்படு முன்னதாக, மாட்சிமை தங்கிய மன்னர்பிரானோடு மிஸ்டர் சர்ச்சில் விருந்துண்டார். பல கனவான்கள் அங்கே விருந்துண்ண வந்திருந்தார்கள். அவர்களில் அநேகம் பேருக்கு மிஸ்டர் சர்ச்சில் கெய்ரோவுக்கு, மகா நாட்டை முன்னிட்டுப் புறப்படப் போகிறார் என்று தெரியாது. அவ்வளவு இரகசியமாயிருந்தது அவருடைய புறப்பாடு. கெய்ரோ மகாநாடு முடிந்தது. அங்கிருந்து ஈராக்கின் தலைநகரான டேரானுக்கு மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் விஜயம் செய்தனர். இவர்களுக்கு முன்னதாகவே சோவியத் ரஷ்யப் பிரதிநிதியான மார்ஷல் ஸ்டாலின் அங்கே விஜயம் செய்திருந்தார். டேரானைச் சேர்ந்த டப்ரீஸ் என்னுமிடத்தில், மற்றொரு மகாநாடு நடைபெற்றது. இதில் மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் ரூஸ்வெல்ட், பீல்ட் மார்ஷல் ஸ்டாலின் ஆகியோர் கூடினர். இவர்களுக்குத் துணையாக இராணுவத் தலைவர்களும், அரசியல் அறிஞர்களும் கெய்ரோவில் தனியாகக் கூடியதைப் போலவே, இங்கேயும் கூடி விவாதித்தனர். முன் போலவே, அரசாங்கத் தலைவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு கட்டினார்கள். இந்த முடிவுகளும் இரகசியமானவை தான். என்றாலும், இந்த மகா நாட்டின் முடிவுகளைப் பற்றியும் நடவடிக்கைகளைக் குறித்தும் ஒரு அறிக்கை வெளி வந்தது. அந்த அறிக்கையில் முக்கியமாகத் துலங்குவது நேச நாட்டு அரசாங்கங்களின் தலைவர்களுடைய ஓர் ஆசை. அது பேராசையல்ல. நேர்மையான தோர் ஆசைதானது. யுத்த காலத்திலும், யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்ட பிறகுங் கூட, நேச நாடுகளெல்லாம் கூட்டுறவோடு, ஜனநாயக தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நடந்து கொள்ள வேண்டு மென்பது தான் அந்த ஆசை. இராணுவத் தலைவர்கள் போர் முறைகளைக் குறித்து பல நுணுக்கங்களை முடிவு கட்டியிருக்கின்றார்கள். இந்த நுணுக்கங்கள் எவை என்பது வெளியிடப்படவில்லை. வெளியானால், எதிரிகள் அவற்றை அறிந்து கொள்ள நேரும். அப்போது அந்தப் போர் முறை பயனற்றதாகி விடும். எனவே தான், அவற்றை இரகசியமாக வைத்திருக்கின்றார்கள். இப்போது ஜெர்மனிக்குக் கிழக்கே மகத்தான பரந்த ரஷ்ய நாடு இருக்கிறது. அங்கே கடும் போர் நடை பெறுகிறது. ஜெர்மனிக்குத் தெற்கே இத்தாலியிலும் கடும் போர் நடை பெறுகிறது. சென்ற இரண்டு வருஷங்களாக பீல்ட் மார்ஷல் ஸ்டாலின் இரண்டாம் போர் முனையின் அவசியத்தைக் குறித்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் தக்கதோர் சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். இன்னும் அச்சமயம் வரவில்லை. ஆனால் நெருங்கிவிட்டது என்று சொல்லலாம். ஐரோப்பாவின் மேலக் கரையிலிருந்து ஜெர்மனியைத் தாக்குவதற்கு மழைகாலம் ஏற்றதல்ல. எனவே, அடுத்த கோடை காலத்தில், இங்கே தாக்குதல் ஆரம்பமாகலாம். இப்படி நேர்ந்தால், இது தான் இரண்டாம் போர் முனையாக அமையும்.

இந்த மகா நாட்டில் நேசநாட்டு அரசாங்கங்களின் தலைவர்கள் கூடிப் பேசுகிறார்கள் என்ற செய்தி ஜெர்மன் மக்களுக்கு எட்டியவுடன், அவர்கள் மனோதிடம் எந்த அளவிற்குச் சிதைந்திருக்கு மென்று நாம் ஒருவாறு அனுமானிக்கலாம். ஏனென்றால், நாள் தோறும் இரவு பகலென்று பாராமல், நேச நாடுகளின் விமானப் படைகள் ஜெர்மன் நகரங்களையும் தொழிற்சாலைகளையும் கேந்திர ஸ்தானங்களையும் தவிடு பொடி செய்து கொண்டிருக்கின்றன. அன்றியும் ருஷ்யாவில், “சுயேச்சை ஜெர்மானியர் இயக்கம்” என்ற ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த மகா நாட்டிற்குப் பிறகு வெளி வந்த அறிக்கையில், பால்கன் நாடுகளின் வழியாக நேச நாட்டுப் படைகள் போய் ஜெர்மனியைத் தாக்கப் போவதாகக் குறிப்பிடப்படவில்லை. ஒருக்கால் அது எதிர் காலத்திற்குரிய திட்டமாகவிருக்கலாம். இப்போது அவ்வழியாகப் போய்த் தாக்குவதாயிருந்தால், பால்கன் நாடுகளிலுள்ள மக்களுக்கு, நேச நாடுகளோடு சேர்ந்து கொள்ளும்படி ஒரு அறிக்கை விடுத்திருப்பார்கள். பால்கன் நாடுகளிலிருந்து 5 டிவிஷன் படைகள் அதாவது 10 லட்சம் போகள் ஜெர்மன் படைகளிலிருந்து போராடுகின்றார்கள். பால்கன் நாடுகள் நேச நாடுகளோடு உறவு கொண்டு விட்டால், இந்த 10 லட்சம் பேர்களும் ஜெர்மனியோடு சேர்ந்திருக்க முடியாது போம். அப்போது ஜெர்மனியின் நிலைமை மேலும் சீர்கெடும்.

இந்த டிப்ரீஸ் மகா நாட்டின் பயன் என்ன? அக்கிரமத்தையும் அடிமைத் தனத்தையும் அடியோடு ஒழிக்கும் பொருட்டு, பெரிய நாடு, சிறிய நாடு என்ற வேற்றுமைக் கிடமின்றி, ஒத்த நிலைமையில் ஒத்துழைக்க வேண்டும் என்னும் உணர்ச்சி மேவி விட்டது. இதன் மூலம் ஜனநாயக நாடுகளெல்லாம் ஒரு குடும்பம் போல ஒத்து வாழ இடமேற்படும். இப்படிப்பட்ட தோர் நிலைமையை நாடுவது நியாயந் தானே.

எம். பி. இ. பட்டம் எப்படிக் கிடைத்தது?

லெப்டினெனன்ட் நாயரின் கடற் போர் அனுபவம்

நான்கு வாரங்களுக்கு முன்பு வெளி வந்த சஞ்சிகையில் 2-வது லெப்டினெனன்ட் என். அனந்தன் நாயருக்கு, எம்.பி.இ. பட்டம் வழங்கப்பட்டது பற்றி சர். சாமுவேல் ரங்கநாதம் அவர்கள் லண்டன் பி.பி.சி. வானொலி நிலையத்தி லிருந்து செய்ததோர் வானொலி பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்த செய்தியை, வெளியிட்டிருந்தோம். இப்போது மிஸ்டர் நாயர் சென்னை மூன்றுவது பட்டாளத்தில் 2-வது லெப்டினெனன்டாக இருக்கிறார். அவருக்கும் ஒரு நிருபருக்கும் நடை பெற்ற சம்பாஷணையை, சென்னை வானொலி நிலையத்தார் ஒலிபரப்பினார்கள். தனக்கு அப்பட்டம் எப்படிக் கிடைத்தது என்பது பற்றிய முழு விவரமும் அதில் விளக்கமாகக் கூறி யிருக்கிறார்.

2-வது லெப்டினெனன்ட் என். அனந்தன் நாயர், எம்.பி.இ.

நிருபர்.—தங்களைக் கண்டு, நடுக் கடலில் நம் வியாபாரக் கப்பல்களில் தங்களுடைய அனுபவங்களைப் பற்றி, தங்கள் வாய்ப் பிறப்பைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பங் கிடைத்தது பற்றி மெத்தச் சந்தோஷம். இவை பற்றி தாங்கள் கூறும் முன்னதாக சில கேள்விகள் கேட்கலா மென்று நினைக்கிறேன்.

நாயர்.—பேஷாகக் கேளுங்கள்.

நிருபர்.—உங்களுக்குச் சொந்த ஊர் திருவாங்கூர் தானே?

நாயர்.—என் சொந்த ஊர் திருவனந்தபுரந் தான். என் இளமையை அங்கே தான் நான் கழித்தேன்.

நிருபர்.—தாங்கள் எப்போது வியாபாரக் கப்பற் படையில் சேர்ந்தீர்கள்?

நாயர்.—சுமார் 4 வருஷங்களுக்கு முன்னால். அப்போது எனக்கு வயது 21.

நிருபர்.—நீங்கள் கப்பற் படையில் சேரக் காரண மென்ன?

நாயர்.—அப்போது என்ன காரணத்தினால் சேர்ந்தே னென்று இப்போது என்னால் சொல்லக் கூடவில்லை. ஆனால், ஒரு விஷயம். கடற்கரைக் கருகில் தான் எங்கள் வீடு. தூரத்தில் கப்பல்கள் போவதும் வருவதும் அவற்றின் விளக்குகளால் நான் தெரிந்து கொள்ளுவது வழக்கம். அப்போது நானும் கப்பலேறிப் போய், பல நாடுகளைக் காண வேண்டு மென்னும் ஆசை, எனக்கு உண்டானது இயற்கை தானே.

நிருபர்.—வேறு காரணங்கள் ஏதேனும் உண்டா?

நாயர்.—நான் அப்போது தான் கம்பியில்லாத் தந்திப் பயிற்சி முடிந்து 'மார்கோனி தேர்ச்சிப் பத்திரம்' பெற்றிருந்தேன். இந்தப் பயிற்சியைப் பயன் படுத்த வேண்டு மென்னும் ஆசை எனக்கு உண்டானது. அப்போது நான் கல்கத்தாவி லிருந்தேன். கல்கத்தாவுக்கும் சிங்கப்பூருக்கும் போய் வந்து கொண்டிருந்த ஒரு கப்பலில் 2-வது ரேடியோ உத்தியோகஸ்தர் பதவி எனக்குக் கிடைத்தது.

நிருபர்.—முதன் முதல் எப்போது நீங்கள் கப்பலில் கிளம்பினீர்கள்?

நாயர்.—1940-ம் வருஷம் ஆரம்பத்தில்.

நிருபர்.—உங்கள் பிரயாணத்தில் எந்தெந்தத் துறைமுகங்களில் நீங்கள் தங்கினீர்கள்?

நாயர்.—பெரும்பாலும் ரங்கூனில். சில சமயங்களில், சிங்கப்பூர், பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், மலாக்கா, ஆக்யாப் ஆகிய துறைமுகங்களிலும் எங்கள் கப்பல் தங்கியதுண்டு.

நிருபர்.—நமது வியாபாரக் கப்பலில் தாங்கள் இருந்த பொழுது, எத்தனை முறை நீங்கள் பிரயாணஞ் செய்தீர்க ளென்று சொல்லக் கூடுமா?

நாயர்.—எத்தனையோ தரம் போனோம். முறையாகக் குறைந்தது மாத மொன்றிற்கு 3 முறையாவது போவோம்.

நிருபர்.—அப்படியானால், அந்தப் பிரயாணங்களில் மயிர்க்கூச் செறியத் தக்க சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கு மென்று நினைக்கிறேன்.

நாயர்.—ஆம். எத்தனையோ சம்பவங்கள். 1942-ம் வருஷம் நான் ஜனங்களை ஏற்றிக் கொண்டு போகும் கப்பலில் இருந்தேன். அது ரங்கூனுக்குப் போய்க் கொண்டிருந்தது. நள்ளிரவு. இருட்டு மிகவும் அதிகம். கடல் மிகவும் கொந்தளிப்பா யிருந்தது. சற்று தூரத்தில் ஒரு சிறிய படகைக் கண்டோம். நாங்கள் சந்தேகங் கொண்டோம். ஏனென்றால், கடல் கொந்தளிப்பா யிருக்கும் அந்த நள்ளிருவில், யாரும் அவ்வளவு சிறிய படகில் துணிந்து நடுக் கடலுக்கு வர மாட்டார்கள். உடனே நாங்கள் அதை விரட்டினோம். அந்தப் படகு எங்கள் கப்பலின் பாதைக்குக் குறுக்கே கடந்து செல்லப் பார்த்தது. அதற்குள் எங்கள் கப்பல் அதைத் தாக்கியதனால், அந்தப் படகு கவிழ்ந்தது. அது மீன் பிடிக்கும் ஒரு பர்மியப் படகு. அதிலிருந்த பர்மியர்களும் தாம் கஷ்டப்பட்டு பிடித்த மீன்க ளெல்லாம் போயினவே என்று வருந்தினார்கள்.

நிருபர்.—வேறு ஏதேனும் சம்பவங்கள் உண்டா?

நாயர்.—உண்டு. ஒரு சமயம் எங்கள் கப்பல் நிறைய பெட்ரோல் ஏற்றிக் கொண்டு ஒரு துறைமுகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். அப்போது எங்கள் கப்பலைத் தாக்க வந்த 'டார்பிடோ', குறி தவறி விட்டது. இதற்குக் காரணம் எங்கள் கப்பலோட்டியின் கெட்டிக்காரத் தனந் தான். ரங்கூனை ஜப்பானியர் கைப்பற்றி கொஞ்ச காலத்திற்குப் பிறகு இச்சம்பவம் நடந்தது.

நிருபர்.—நல்லது. தங்களுக்கு எம்.பி.இ. பட்டம் வழங்கப்பட்ட போது, உங்கள் மன நிலை எப்படி யிருந்தது என்று அறிய பொது மக்கள் உண்மையிலேயே ஆவலா யிருப்பார்கள்.

நாயர்.—இயற்கையாகவே நான் சந்தோஷ மடைந்தேன். ஆனால், உண்மையிலேயே ஆச்சரிய மடைந்தேன். எனக்கு இந்த கௌரவப் பதக்கம் வழங்கப்படத் தக்க மகா விசேஷமான காரியம் எதுவும் செய்ததாக நான் நினைக்கவே யில்லை. அத்தனையும் ஒரே நாள் வேலை தான்.

நிருபர்.—நீங்கள் உண்மையிலேயே தன்னடக்கம் உள்ளவர்கள் தான். தங்களுக்குப் பதக்கம் வழங்கப்பட்டது சம்பந்தமாக அரசாங்கத்தார் குறிப்பிட்டுள்ளவை அச்சம்பவத்தைக் குறித்து விளக்கமா யில்லை. தயவு செய்து தாங்கள் விளக்கிக் கூறவேண்டும்.

நாயர்.—இதோ கூறுகிறேன்.

நிருபர்.—அச்சம்பவம் வங்காளக்குடாக் கடலில் தான் எங்கேயோ நிகழ்ந்ததென்று நினைக்கிறேன்.

நாயர்.—ஆம். சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் 5-ம் தேதி திங்கட்கிழமை யென்று நினைக்கிறேன். அதிகாலை அருணோதய வேளை. என் காவல் வேலை முடிந்து என் அறைக்குப் போய் ஒரு கோப்பைக் காப்பி சாப்பிட்டு விட்டு, அப்போது தான் என் படுக்கையைச் சித்தம் செய்து கொண்டிருந்தேன், படுத்துத் தூங்குவதற்கு. அப்போது அபாயச் சங்கு ஒலித்தது.

நிருபர்.—கப்பலில் இருந்தவர்க ளெல்லாம் அப்போது எங்கிருந்தார்கள்?

நாயர்.—இயற்கையாகவே, அவ்வளவு அதிகாலையில் பெரும்பாலானவர்கள் தூங்கிக் கொண்டு தான் இருந்திருப்பார்கள். அபாயச் சங்கு சத்தத்தைக் கேட்ட வுடனே, அவரவர்கள் தம் இடங்களுக்கு விரைந்து போய்ச் சேர்ந்தார்கள்.

நிருபர்.—அபாயச் சங்கு ஒலித்ததற்குக் காரணம்?

நாயர். ஏனென்றால், வெகு தூரத்திற் கப்பாலிருந்து விமானங்கள் பறந்து வரும் சத்தம் கேட்டது. அது வெகு விரைவில் பறந்து எங்கள் தலைக்கு மேலே வந்து விட்டது. அப்போது நான் என் அறையில் தான் இருந்தேன். கப்பலின் முன் பகுதியை ஒரு வெடி குண்டு தாக்கியது. உடனே என் தந்தியில்லாக் கம்பி இயந்திர அறைக்கு ஓடி, என் வேலைத் தலத்தி லிருந்தேன்.

நிருபர்.—பிறகு என்ன நிகழ்ந்தது?

நாயர்.—நான் கீழ் தளத்திற்கு ஓடினேன். அப்போது, ஒரு விமானந் தாங்கிக் கப்பலைக் கண்டேன். அன்றியும் ஒரு 'க்ருய்ஸர்' கப்பலும் ஒரு பீரங்கிப் படகும் இருந்தன. அவை எங்களை, மகா வேகமாக நெருங்கி வந்தன. விமானந் தாங்கிக் கப்பல் தான் எங்களை முதலில் சுட்டது. ஜப்பானியர் எங்களைத் தாக்குகிறார்கள் என்பது பற்றி எங்களுக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

நிருபர்.—தற்காப்புக்கான தளவாடங்கள் ஏதேனும் உங்களிடம் உண்டா?

நாயர்.—கிடையாது. ஒன்றுமில்லை.

நிருபர்.—உங்கள் கப்பலுக்குத் துணையாக ஏதேனும் போர்க் கப்பல்கள் வந்தனவா?

நாயர்.—இல்லை. தனிமையாகத் தான் போனோம்.

ஜப்பானியர் சர்வதேச விதிகளை மீறுகிறார்கள்.

நிருபர்.—நீங்கள் தனிமையாகப் போகிறீர்க ளென்றும் உங்களிடம் ஆயுதங்கள் இல்லை யென்றும் ஜப்பானியர்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லவா? தெரிந்திருந்தும் உங்களைச் சுட்டார்களா?

நாயர்.—ஆம். சுமார் 300 கஜ தூரத்தி லிருந்து சுட்டுக் கொண்டே யிருந்தார்கள். விமானங்களி லிருந்தும் தாக்கினார்கள். அந்த விமானந் தாங்கிக் கப்பலி லிருந்து கிளம்பிய 3 விமானங்கள் எங்களைத் தாக்கிக் கொண்டே யிருந்தன.

நிருபர்.—எந்த விதப் பாதுகாப்போ, மீட்சிக்கு வழியோ இல்லாதிருந்த உங்கள் மீது சுவேதி சர்வதேச விதிகளை அடியோடு அவமதிப்பதாகாதா?

நாயர்.—ஆம். ஜப்பானியர்கள் யாரென்று நமக்குத் தெரியும். சர்வதேச விதிகளை அவர்கள் மதிப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்ததே கிடையாது.

(5-ம் பக்கம் பார்க்க)

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

நீலகிரி ஜில்லா

நவம்பர் மாதத்தில் நீலகிரி தேசியப் போர் முன்னணியின் நபர்கள் யுத்தத்திற்குச் சென்றிருக்கும் வீரர்களின் குடும்பங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வதில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். உதவி அமைப்பாளர் திரு. எம். ஹாலையா மொத்தம் எட்டு வீரர்களின் குடும்பங்களை பார்த்திருக்கிறார். இரண்டொரு குடும்பங்களைப் பற்றி மிலிடரி வெல்பேர் ஆபீஸருக்கும் எழுதி யிருக்கிறார். பிரசாரர்களும் மேற்படி பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

உணவுப் பொருள் பங்கிடும் முறை கொஞ்சம் நாட்களுக்குள் குன்னூரிலும் உதகையிலும் வரபோவதால் இதைப் பற்றி பிரசாரம் செய்வதிலும் ரேஷனிங் ஆபீசர்களுக்கு உதவி புரிவதிலும் தேசியப் போர் முன்னணியின் உதவி அமைப்பாளரும் தாலூகா பிரசாரகர்களும் ஈடுபட்டிருந்தனர்.

செங்கல்பட்டு ஜில்லா

சென்ற மாதத்தில் மழை குறைவினால், பயிர் செய்வதற்கு நல்ல வசதிகள் ஏற்பட்டன. ஜில்லாவிலுள்ள எல்லா ஏரிகளும் பூர்ணமாக நிறைந்திருக்கின்றன. நஞ்சை நிலங்கள் சாகுபடி ஆகிவிட்டன. வரப்போகின்ற தை மாதத்தில் ஏராளமான நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது காஞ்சீபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம் தாலூக்காக்களில் அரிசி கண்ட்ரோல் அமுலில் இல்லாததினால், புழுங்கல் அரிசி $3\frac{1}{2}$ படியும் பச்சரிசி $2\frac{1}{2}$ படியும் விற்கிறது. மிராசுதார்கள் தங்கள் வசமிருக்கும் நெல்லை, தாங்களே விற்க ஆரம்பித்திருக்கிறார்கள். மல்லாக்கொட்டை வெட்டி இப்போது ரூபாய்க்கு 3 முதல் 4 மரக்கால் வரை விற்கிறது. இதனால் கடலை எண்ணெய் விலை முன்னிருந்ததை விடக் குறைந்திருக்கிறது.

சென்ற மழையினால் ஏற்பட்ட ரஸ்தா உடைப்புகளெல்லாம் மூடப்பட்டு வருகின்றன. மீண்டும் மீண்டும் மழை தொடர்ந்து பெய்துகொண்டிருப்பதால், முக்கியமான சில ரஸ்தாக்கள் பழைய முறையில் ஏற்படவில்லை. பாலாற்றில் இன்னும் சிறிதளவு வெள்ளம் போய்க்கொண்டிருக்கிறது. சைதாப்பேட்டை, திருவள்ளூர் முதலிய இடங்களில் அரிசி பங்கீடுச் சீட்டுகள் வந்த பிறகு, இப்போது அரிசிக்குக் கஷ்டமில்லை. விறகுப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அதற்கும் சமீபத்தில் பங்கீடுச் சீட்டுக்கள் சீக்கிரத்தில் ஏற்படுத்தலாமென யோசனையில் இருப்பதாகத் தெரிகிறது.

மண்ணெண்ணை முன்னைவிட இப்போது ஸப்ளை குறைவின் காரணமாக குறைவாகவே கொடுக்கப்படுகிறது. இதனால் பொது மக்கள் ஏற்கெனவே குறைந்திருந்த மண்ணெண்ணை இன்னும் குறைக்கப்பட்ட காரணத்தினால் ரொம்பவும் கஷ்டத்தை அடைகிறார்கள்.

ஸ்டாண்டர்ட் துணி இந்த ஜில்லாவில் அதிகமாக விற்கிறது. பெண்களும் இதை வெகுவாக உபயோகப்படுத்துகிறார்கள். இனி, இந்தத் துணிகளை நல்ல கலர்களில் 16 அல்லது 18 முழத்தில் தயாரித்து விற்கக் கூடுமானால், பெண்கள் இதையே பெரும்பாலும் வாங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்க்கரை சில தாலூக்காக்களில் வெண்மையாக கிடைக்கவில்லை. பழுப்பு நிறமாகத்தான் கிடைக்கிறது. இப்போது உள்ள நிலைமையில் வரும் காலத்தில் போதுமான அரிசி இந்த ஜில்லாவிற்கு தயாரிப்பதுமல்லாமல் வெளி ஜில்லாக்களுக்குக் கூட அனுப்ப முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை

சென்னையில் இன்னும் விறகுப் பஞ்சம் நீங்கவில்லை. பொது ஜனக் கஷ்டங்களை நீக்குவதற்கு சர்க்கார் மீர்சாப்பேட்டை, சிந்தாதரிப்பேட்டை, புரஸவாக்கம், ராயபுரம் ஆகிய இடங்களில் விறகு தொட்டிகளை திறந்து வைத்திருக்கிறார்கள். 1943-ம் வருஷம் நவம்பர் மீ 15உயில் இராயபுரம் செயின்ட் பால் சர்ச் மைதானத்தில் மற்றொரு விறகு தொட்டி திறந்து வைக்கப்பட்டது. மேன்மை தங்கிய கவர்னரின் பிரதம ஆலோசகர் சர். எச். எம். ஹூட், K.C.I.E., C.S.I., I.C.S., அவர்கள் திறப்பாளராவும், மாகாண தேசீயப் போர் முனை அமைப்பாளர் காப்டன் ஜி.டி.பி. ஹார்வி அவர்கள் விழாத் தலைவராகவும் திகழ்ந்திருந்தார்கள். நகர அமைப்பாளர் ராவ் சாகிப் ஆல்பர்ட் ஜேஸுதாஸன் அவர்கள் விறகு பஞ்சத்தால் பொது ஜனங்கள் அடைந்துவரும் துன்பங்களையும், கஷ்டங்களையும் விளக்கினார்கள். இந்த விழாவின்போது ஆயிரக் கணக்கான பொது ஜனங்கள் நிறைந்திருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும்.

அரசாங்க அனுமதியின்படி, தேசீயப் போர்முனையின் ஆதரவில் அமைத்திருக்கும் விறகு தொட்டிகளில் பொது ஜனங்கள் பயன் அடைந்து வருகிறார்கள் என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இன்னும் பல விறகு தொட்டிகள் திறப்பதற்கு அரசாங்கத்தார் யோசித்துக் கொண்டிருப்பதாகவும் கூடிய சீக்கிரம் திறக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

சர்க்கரையும், அரிசியும்

முன்போல் சர்க்கரைக் கஷ்டம் பொது ஜனங்களுக்கு இல்லை.

அரிசிப் பங்கீடு முறையின் திட்டப்படி பொது ஜனங்கள் அரிசிக் கஷ்டத்திலிருந்து சிறிது நீங்கியிருக்கிறார்கள். சில தினங்களாக அரிசி பங்கீடு முறையை அநுசரித்து பாதி பச்சரிசியும், பாதி புழுங்கல் அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. அரிசிக் கஷ்டம் பொது ஜனங்களுக்கு நீக்கப்பட்டு நலம்பெற்று வருகிறார்கள்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

நிருபர்.—உங்கள் கப்பலை எதிரிகள் தாக்கிக் கொண்டிருக்கும் போது, உதவி கோரி, கம்பி யில்லாத் தந்தி மூலம் செய்தி யனுப்ப முடியவில்லையா ?

நாயர்.—முடியவில்லை. நாங்கள் செய்தியனுப்பு முன்னதாகவே, கம்பியில்லாத் தந்தி இயந்திர அறையை ஒரு வெடிகுண்டு நாசப்படுத்திற்று. உடனே வேறொரு இயந்திரத்தை ஒரு படகில் வைத்துக் கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தேன். அதையும் மற்றொரு குண்டு பாழாக்கியது.

நிருபர்.—நீங்கள் எந்த விதத்திலும் செய்தி யனுப்பவோ செய்தி பெறவோ முடியாதபடிச் செய்து, ஒருவித உதவியு மில்லாமல் கடலிலேயே நீங்கள் சாக வேண்டு மென்று அவர்கள் உறுதி கொண்டிருந்தார்க ளென்று தெரிகிறது. புஷிடோவைக் குறித்து பிரமாதமாகப் பேசுகிற இவர்களுடைய மனப்பான்மையை, இந்தச் சம்பவம் களக்கமற விளக்குகிறது.

நாயர்.—ஆம். அப்படித் தான்.

நிருபர்.—பிறகு என்ன நடந்தது ?

நாயர்.—அதற்குள் கப்பலின் முன்புரம் முழுகி விட்டது. கப்பல் வலது பக்கம் சாய்ந்தது. கடல் அலைகள் அடி தளத்தில் வந்து மோதின. அப்போது கப்பலைக் கைவிட்டு விடும்படி 'காப்டன்' கட்டளை யிட்டார். அது முழுகும் போது 20, 30 வெடி குண்டுகள் அதன்மேல் வீழ்ந்து வெடித்தன. இத்தனையும் 5 நிமிஷங்களில் நிகழ்ந்தன. கடைசி வரை எங்கள் கப்பலில் இருந்தவர், கப்பலோட்டியான மாஸ்டர் எம். காஸ்டெலோ வெடி குண்டுகளும் கடுமையாகத் தாக்கின. கப்பலும் வலதுபுரம் வெகுவாகச் சாய்ந்தது. ஆபத்துகளுக்கு உதவும் பொருட்டு அங்கிருந்த படகுகளெல்லாம், நாசமாகி விட்டன. ஆனாலும் இரண்டு படகுகள், சேதமடைந்திருந்தாலும் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. நாங்கள் நீந்திக் கொண்டு, அவற்றை போயடைந்தோம்.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்கு முந்திய இரவில், தம் கப்பல் உடைந்ததனால் நடுக் கடலில் தவித்துக் கொண்டிருந்த மாலுமிகள் 60 பேர்களை, நாங்கள் மீட்டோம். 10 மணி நேரத்தில் அதே கதி எங்களுக்கும் நேரு மென்று நாங்கள் கனவிலும் நினைத்ததில்லை.

நிருபர்.—உங்களை மீட்க, ஜப்பானியர் முயற்சிக்க வில்லையா ?

நாயர்.—இல்லவே யில்லை. எங்கள் துயரத்தைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர். நாங்கள் தொத்திக் கொண்டிருந்த காட்சியைப் படமெடுக்கும் பொருட்டு எங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

நிருபர்.—தயவு செய்து நான் கேட்பது பற்றி மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களில் யாராவது பீதி கொண்டதுண்டா ?

நாயர்.—அதெல்லாம் கிடையாது. ஜப்பானியர்களின் மிருகத் தனமான செயல்களால் மகா வெறுப்புக் கொண்டிருந்தனர். ஜப்பானியர்கள் தாம் எடுத்த படங்களைக் கழுவிப் பார்த்தால், கோபமும் வீரமும் முகங்களில் தவழும் சில மாலுமிகளின் படங்களைத் தான் அவர்கள் காணக் கூடும்.

நிருபர்.—அந்தக் கடலில் சுறு மீன்கள் இல்லையா ? சுறு மீன்கள் உங்களைக் கடித்து விடாதபடி காப்பாற்ற ஜப்பானியர்கள் முயற்சித்திருக்க வேண்டுமே ?

நாயர்.—இல்லை ,இல்லை, எங்களுடைய பரிதாபமான நிலைமையைக் கண்டு ஆனந்தங் கொண்டார்கள். விமானந் தாங்கிக் கப்பல் போன பிறகு அவர்கள் காணப்படவில்லை. அந்தக் கப்பல் புறப்படு முன்பு சுமார் 200 ஜப்பானியப் படையினர் அணிவகுத்து நின்று, எங்களுக்கு இழைத்த தீங்கைக் குறித்து, மிகவும் பெருமை யோடு நடந்தார்கள்.

நிருபர்.—நீங்கள் எந்நேரம் அப்படித் தவித்துக் கொண்டிருந்தீர்கள் ?

48 மணி நேரம் கடலில் கஷ்டம்.

நாயர்.—இரண்டு நாட்கள் வரை காற்று கடுமையாக இருந்தது. அலைகளும் சுறு மீன்களும் வெகு அதிகம். எங்களில் சிலர் காயப்பட்டோம். என்றாலும், எங்கள் ஓட்டைப் படகுகளைப் பற்றிக் கொண்டே எங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தோம். 48 மணி நேரம் இவ்வாறாக அவதிப்பட்டு, பிறகு கிழக்குக் கரையைப் போயடைந்தோம்.

நிருபர்.—கரை சேர்ந்த பிறகு என்ன செய்தீர்கள் ?

நாயர்.—எங்கள் கப்பலின் காப்டனை நாங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு மீட்டிருந்தோம். அவருடன் நாங்கள் சில மைல்கள் தூரம் உள் நாட்டிற்குப் போய், ஒரு சிறு குக்கிராமத்தை யடைந்தோம். அந்தக் கிராம வாசிகள் எங்களை அன்போடு உபசரித்து, பழம் பால் முதலிவை கொடுத்தனர்.

நிருபர்.—எத்தனைப் பேர் இப்படித் தப்பினீர்கள் ?

நாயர்.—30, 35 பேர்கள். இவர்களில் இந்தியர்களும், சீனர்களும் பிரிட்டிஷாரு மிருந்தனர்.

நிருபர்.—லெப்டினென்ட் நாயர் ! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் பல்லாண்டு இனிது வாழ வேண்டும். தங்களையும் தங்களைப் போன்ற வீரர்களையுங் குறித்து இந்தியா பெருமை யடைகிறது. தாங்கள் கூறிய இச்சம்பவம் நம்மாலுமிகளின் உணர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகவிருக்கிறது. ஜப்பானியர்கள் வெடி குண்டுகளால் உங்களைத் தாக்கினார்கள். உங்கள் வீர உணர்ச்சியை வெல்ல அவர்களால் முடியவில்லை. அது தான் உண்மையான மாலுமியின் உணர்ச்சி. அவர்களுடைய புகழ் ஓங்குக !

செயல் ஒன்று பலன் இரண்டு.

"ஆடு மேய்த்தாற் போலிருக்க வேண்டும்; அண்ணனுக்குப் பெண் பார்த்தாற் போலுமிருக்க வேண்டும்" என்பது பழமொழி. இதற்கு இலக்காக இருக்கின்றனர் இராணுவ மோட்டார் டிரைவர்களாகப் படையில் சேர்ந்தவர்கள். தென்னிந்தியாவில் ஒரு இராணுவப் பயிற்சி சாலையில் பயிற்சிபெறும் மோட்டார் டிரைவர்கள், உணவிற்கு முடைப்பட்ட ஊர்களுக்கு அதிகப்படி உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்கள், சென்ற 9 மாதங்களில், 1,800 டன் அரிசியை ஏற்றிக்கொண்டு போய்ச்சேர்ந்திருக்கிறார்கள். இதனால், மோட்டார்கார் ஓட்டுவதில் நல்ல பயிற்சி ஏற்பட்டது மட்டு மன்றி, பொது மக்களுக்கு அருந் தொண்டாற்றினார்கள். ஆகையால் தான் அந்தப் பழமொழி அவர்களுக்குப் பொருந்தும் என்று கூறினோம்.

சினிமாவும் யுத்த முயற்சியும்

சமீபத்தில், "யுத்த முயற்சி" என்னும் தொடரில், சென்னை வானொலி நிலையத்திலிருந்து மிஸ். ராதா பாய் அவர்கள் ஒலி பெருக்கிய சொற்பொழிவாவது :—

என்ன சமாசாரம் ? என்று சாதாரணமாகக் கேட்கிறோம். சமாசாரங்களைத் தெரிந்து கொள்ளுவதிலேயே எல்லோருக்கும் ஒரு பிரியம் இருக்கத் தான் செய்கிறது. அதுவும் யுத்தத்தைப் பொருத்த சமாசாரம் என்றால், ஆவல் சற்று அதிகமே. சமாசாரம் தெரிவிக்கும் நாகரிக சாதனம் மூன்றே. அவை பத்திரிகை, ரேடியோ, சினிமா படம். பத்திரிகையில் ஒரு விசேஷத்தைப் படிக்கிறோம். அதே விஷயத்தை ரேடியோவில் கேட்கிறோம். ஆனால், சினிமா படத்தில் பார்த்தும் கேட்டும் திருப்தி அடைகிறோம். தியேட்டரில் சுகமாக உட்கார்ந்து கொண்டு போர் முனைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், உள் நாட்டு யுத்த முயற்சிகளையும் நேருக்கு நேராகப் பார்க்கின்றோம். ஆகாய விமானங்கள் போர் புரிவதும், டாங்கிகள் திரண்டு செல்வதும், தொழிற் சாலைகள் இரவும் பகலுமாக யுத்தத் தளவாடங்களைத் தயாரிப்பதும், பார்க்கும் பொழுது, யாருக்கும் ஓர் உள்ளக் கிளர்ச்சி ஏற்படுகிற தல்லவா ? இது தான் சினிமா படங்களின் பிரசார சக்தி. சமாசாரத்தைத் தெரிவித்து, கருத்தை விளக்கி, மக்களின் மனதைக் கவர்ந்து, கொள்கையைப் பரப்புவதாம்.

யுத்த முயற்சியும் பிரசாரமும்

இவ்வித பிரசார சக்தி தான், தற்கால யுத்த முறைமைக்கு மிகவும் இன்றியமையாதது. பாதுகாப்புப் படைக்கு அடுத்தபடியாக, வெற்றிக்கு முக்கியமானது, இவ்விதப் பிரசாரப் படையே யாகும். ஆகவே, யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு நாடும் இப்பொழுது பிரசாரத்திற்காக கோடிக் கணக்கான பணம் செலவழிக்கிறது. மேலும், தனி நிபுணர்களும் இதற்கென உழைக்கின்றனர். அவர்களும் சினிமாவின் பிரசார சக்தியை அதிகமாகக் கையாளுகிறார்கள். யுத்த காலத்தில், இதர எல்லாத் தொழில்களும் எப்படி யுத்த முயற்சிக்காக பிரத்யேகமாக ஈடுபட்டு வருகின்றனவோ, அதை போல், சினிமா படங்களும் யுத்த பிரசாரத்தைத் தவிர, வேறு எதையும் கையாள்வதில்லை. முக்கியமாக ஹாலிவுட்டிலிருந்து சமீப காலத்தில் வெளிவந்துள்ள படங்களைக் கவனித்தால், இதன் உண்மை விளங்கும். சாதாரணமான பொழுது போக்குக் கதைகளிலுங் கூட, யுத்த முயற்சி சம்பந்தமான ஏதோ ஒரு தத்துவம் அதில் பிரசாரம் செய்யப்பட்டே யிருக்கும். இந்தப் படங்களோடு, அவ்வப்போது யுத்த முனைகளில் நடக்கும் முக்கிய சம்பவங்களைப் படம் பிடிக்கப் பட்டுச் செய்திச் சுருணைகளாக வெளி வருகின்றன. இதன் மூலம் அவ்வப் போது ஏற்படும் வெற்றி தோல்விகள் வெகு துரிதமாக நமக்கு வெளிப் படுகின்றன.

யுத்த லட்சியங்களில் நம்பிக்கை யுண்டாகும்

இந்தியாவிலும் பிரசாரத்திற்கென ஒரு தனி இலாகா சர்க்காரால் நிறுவப்பட்டிருக்கிறது. கல்வி உணர்ச்சி மிகவும் கேவலமாயிருக்கும் நம் நாட்டில், 40 கோடி மக்களுக்கு யுத்த விஷயங்களைப் பிரசாரம் செய்வது சாமானிய காரியமல்ல. வறுமையும் சிறுமையும் நிறைந்த இந் நாட்டில், பிரசாரம் சரிவர நடத்தப்பட வேண்டுமானால், சினிமா படங்களே தகுதியான சாதனமாகும். ஏனெனில், பத்திரிகை, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே பரவுகிறது. ரேடியோவும், சினிமாவும் தான் பாமர மக்களுக்குக் கூட விஷயங்களை விளக்குகிறது. தத்ரூபமான காக்ஷிகளைச் சினிமாத் திரையில் காணும்போது, கற்பனா சக்தியற்றவர்களுக்குங் கூட, ஓர் உணர்ச்சி உண்டாகிறது. டுனிஷியாவிலோ, ஸிஸிலியிலோ நேச நாடுகள் அடைந்துள்ள வெற்றிகளைத் திரையில், கண்கூடாகக் காணும் போது, யுத்த முனை இன்னதென்று அறியாத சாதாரண பாமரன் கூட, உணர்ச்சி பெற்று, தானே நேரில் அம்முனையில் இருப்பது போல் உற்சாக மடைகிறான் ; யுத்த லக்ஷியங்களில் நம்பிக்கையும் கொள்கிறான்.

ஆர்வம் தூண்டப் படுகிறது

திருஷ்டாந்தமாக, நமது சிப்பாய்கள் பட்டாளத்தில் முதன் முதல் சேர்வதிலிருந்து அவர்களுக்குத் தரப்படும் யுத்தப் பயிற்சிகள், அவர்கள் வாழ்க்கையை சுகமாகக் கழிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் வசதிகள், போர் முனையில், அவர்கள் வீராவேசம், தேசபக்தி, சகோதரப் பான்மை முதலியவை பொருந்தி போரடும் தீரத்தை, தத்ரூபமாகச் சித்தரித்துக் காட்டும் சினிமாப் படங்களைப் பார்க்கும்போது, மக்களிடை ஓர் ஆர்வம் தூண்டப்படுகிறது.

யுத்தச் செய்திகள் மட்டுமே அல்லாமல், யுத்த காலத்தில் ஜனங்கள் உள் நாட்டில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டு மென்பதை எடுத்துக் காட்டுவதற்கு, சினிமா சிறந்த சாதனமாகும். படைகளின் பல சாதனங்களில் சேர்ந்து சேவை செய்யும்படி ஜனங்களைத் தூண்டவும், மற்றும் எதிரிகளின் பொய்ப் பிரசாரத்தால் ஜனங்களிடையே ஏற்படக்கூடிய கலவரங்களை அடக்கவும் உணவுப் பஞ்சம், ஜனக் கட்டுப்பாடு, சமூக ஒத்துழைப்பு முதலிய பல சமூக முன்னேற்றக் கொள்கைகளைப் பரப்பவும், சினிமா படம் அதிக உபயோகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சாமான்களை சட்ட விரோதமாகச் சேகரித்து வைத்து அதிக லாபம் கொள்ளையடிப்பது எவ்வளவு அநீதி என்பதையும், அதனால் ஜனங்களுக்குள் எவ்வளவு துன்பமும், சஞ்சலமும், ஏற்படுகின்றன வென்பதையும், மற்றும் பண்டங்களைப் பாழாக்குவதால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் நாம் வெகு தெளிவாக சினிமா படங்கள் மூலம் ஜனங்களுக்கு விளக்கலாம். தவிரவும், யுத்த சம்பந்தமாக, சர்க்கார் அவ்வப்போது வெளியிட்டு வரும் சட்ட திட்டங்களைப் பாமர மக்களுக்கு எடுத்துக் கூற சினிமா படம் அனுகூலமாகிறது.

பிற நாடுகளோடு பரஸ்பர ஒற்றுமை

இவற்றைத் தவிர, நம் நாட்டு யுத்த முயற்சி, ஏற்பாடுகளை நேச நாடுகளுக்கு எடுத்துக் காட்ட, சினிமா சிறந்த கருவியாகிறது. நம் தேசத்தில் அவ்வப்போது நடத்தும் கொண்டாட்டங்கள், விழாக்கள், யுத்த சம்பந்தமான முஸ்தீபுகள், ஆகியவற்றை, சினிமா படமாகத் தயாரித்து, நம் இதர நேச நாடுகளுக்கு அனுப்பும்போது நமக்குள் பரஸ்பரமான உணர்ச்சியும் ஒற்றுமையும் ஏற்படுகிறது.

ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் போர் முனையில் போராடும் நமது சிப்பாய்களும் இதர வீரர்களும், அவர்களுடைய வெற்றிக்காக நாம் இங்கே செய்து வரும் பெரும் முயற்சிகளையும், நம் தொழிற் சாலைகளில் தயாரித்து வரும் ஆயுதங்களையும், வெளியேற்றும் இதர யுத்த பொருட்களையும், சினிமா படங்கள் மூலமாக பார்க்கும் போது, உண்மையில் அளவில்லாத உற்சாகமே அடைகிறார்கள். மேலும் போர் வீரர்களுக்கும் இதர மக்களுக்கும் சந்தோஷப் பொழுது போக்காக எப்பொழுதும் போல சினிமா இன்றும் உதவுகிறது. சினிமாவின் இந்த அபார சக்தியை உணர்ந்தே சமீபத்தில், இந்திய சர்க்காரும், சினிமா தொழில் சம்பந்தமாகப் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். யுத்த முயற்சி சம்பந்தமான படங்களை உற்பத்தி செய்ய இப்பொழுது ஒரு தனி ஸ்தாபனம் சர்க்காரால் நடத்தப்பட்டு வருகிறது. இன்பர்மேஷன் பிலிம்ஸ் என்கிற யுத்த முயற்சி சம்பந்தமான செய்திப் படங்களை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. இதைத் தவிர, "இந்தியன் நியூஸ் பரேட்" என்ற ஸ்தாபனத்தின் மூலமாகவும், அவ்வப்போது செய்தி படங்கள் வெளியிடப் படுகின்றன. மேலும், சர்க்கார் புதிதாக அமுலுக்கு கொண்டு வந்திருக்கும் பாதுகாப்புச் சட்டப்படி, ஒவ்வொரு தமாஷா படத்துடனும், ஒரு சிறிய யுத்தப் படம் காட்டப்படும்.

யுத்தத்திற்குப் பின்னும் செய்திச் சுருணைகள்

ஒவ்வொரு தியேட்டரிலும் சாதார்ண தமாஷா படத்துடன் யுத்த பிரசாரப் படமும் சில சுருணைகள் காட்டப்பட வேண்டும் என்கிற பாதுகாப்புச் சட்டப்படி, உண்மையில் இந்திய சர்க்கார், செய்தி படங்களுக்கு ஓர் விசேஷப் பிரதானத்தைத் தந்திருக்கின்றனர். இதனால் செய்திப் படங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உற்சாகமும் ஆதரவும், யுத்த காலத்தில் மட்டும் அல்லாது பிற்காலத்திலும் நிலைத்திருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

வெளி நாட்டுச் செய்திப் படங்களை நம் நாட்டில் காட்டவும், நம் நாட்டுச் செய்திப் படங்களை வெளி நாட்டிற்கு அனுப்பவும், சில விசேஷ ஸ்தாபனங்களை சர்க்கார் இப்போது ஏற்பாடு செய்கின்றனர். இதைத் தவிர 16 மில்லி மிட்டரில் எடுக்கப்பட்ட படங்க ளடங்கிய பிலிம் லைப்ரரியும் சர்க்காரால் நடத்தப்பட்டு வருகிறது. கிராமாந்திரங்களில் இவற்றை பிரசாரம் செய்ய, ஏறக் குறைய நூறு ப்ரொஜெக்டருக்கு மேல் இப்போது வேலை செய்து வருகின்றன. சர்க்கார் ஆதரவில் தயாரிக்கப் போகும் படங்கள் ஹிந்துஸ்தானி, வங்காளி, தெலுங்கு, தமிழாகிய நான்கு பாஷைகளிலும் வெளிவரும்.

இவ்விதமாக நம் நாட்டில் யுத்தப் பிரசாரத்திற்காகச் செய்து வரும் பல ஏற்பாடுகளைக் கவனிக்கும் போது, இந்த யுத்தத்தினால் இந்திய சினிமா தொழில், ஒரு விசேஷ முன்னேற்ற நிலையை அடைந்து விட்ட தென்றே கூறவேண்டும். செய்திப் படங்களுக்கு என்றும் இல்லாத உற்சாகம் ஜனங்களிடை ஏற்பட்டிருக்கின்றது. நீளம் குறைவான படங்களை ஜனங்கள் இப்போது அதிகமாக விரும்ப ஆரம்பித் திருக்கிறார்கள். யுத்தப் பிரசாரம், வெற்றிகரமாக நடை பெற வேண்டுமானால், உண்மையில் சர்க்கார் மட்டுமே யல்லாது, தனிப்பட்ட முதலாளிகளும் ஏராளமாக பிரசாரப் படங்களைத் தயாரிக்க முன் வரவேண்டும். இல்லை என்றால், இந்தியாவிலுள்ள எல்லா தியேட்டர்களுக்கும் சர்க்கார் ஒருவராலேயே, பிரசார படங்கள் சப்ளை செய்யப்படுவது சாத்திய மில்லை. இந்திய பட முதலாளிகளும் தங்கள் பொறுப்பை உணர்ந்து, யுத்த பிரசார முயற்சியில் தங்களாலான சகல உதவியும் புரிந்து, தங்கள் தொழிலை காப்பாற்றிக் கொள்வதோ டல்லாமல் வெற்றியையும் நிலை நாட்ட முன் வரவேண்டும்.

இந்தியப் படைகளுக்கு மிருக வைத்தியர்கள் தேவை

குதிரைகளும், கோவேறு கழுதைகளும் போராட்டத்தில் மிகவும் உபயோகமானவை. வட ஆப்பிரிக்காவில் இவை நல்ல வேலை செய்தன. இப்போது இத்தாலியப் போர் முனையிலும் பர்மா போர் முனையிலும் செய்து கொண்டிருக்கின்றன.

மோட்டார் வண்டிகளை இராணுவப் போக்கு வரவுகளில் உபயோகிக்க ஆரம்பித்த பிறகு, இந்தியப் படைகளில் இருந்த குதிரைகளும் கோவேறு கழுதைகளும் பயனற்றுப் போயிருந்தன. ஆனால் பர்மா போர் வலுக்க வலுக்க, மேலும் அதிகக் குதிரைகளைச் சேர்க்க வேண்டியதாயிற்று. உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள், தளவாடங்கள் முதலியவற்றைப் போர் முனைக்கு ஏற்றிக் கொண்டு போய்க் கொடுக்கவும், காயப்பட்டவர்களைப் போர் முனைகளிலிருந்து ஏற்றிக் கொண்டு தளங்களுக்குக் கொண்டு வரவும், இவை உதவுகின்றன. ஏனென்றால், இங்குள்ள போர் முனைகள் மலைகள் மீதுள்ள காடுகள். ஆகவே, இவை பெரிதும் உபயோகமா யிருக்கின்றன.

இவை எப்படிப்பட்ட கஷ்டங்களையும் பொருட் படுத்தாது, சலிப்பில்லாமல், யுத்த நிலைமையை அலட்சியமாகக் கருதிக் கொண்டு, உழைப்பவை. மலை மீதுள்ள குறுகிய பாதைகளின் வழியாக, இவை இலகுவில் செல்லும்.

இந்த மிருகங்களுக்கு மருத்துவம் செய்வதற்குத் தேவையான வைத்தியர்கள் தேவை. இந்தப் படையில் சேருகிறவர்களுக்கு 'எமெர்ஜென்ஸி கமிஷன்' உத்தியோகங்கள் கொடுக்கப்படும். அப்படிச் சேருகிறவர்களுடைய வயது 40-க்கு மேற்படக் கூடாது. இவர்கள் இந்திய தரைப் படையைச் சேர்ந்த மிருக வைத்தியப் பகுதியில் சேர வேண்டும். இவர்கள் சென்னை மிருக வைத்தியக் கல்லூரியிலாவது, பஞ்சாப் மிருக வைத்தியக் கல்லூரியிலாவது தேறியவர்களாக இருக்க வேண்டும் ; அல்லது இந்திய இராணுவ மிருக வைத்தியப் படையில் உதவி சர்ஜன் வேலை செய்தவராக விருக்க வேண்டும்.

மற்ற மிருக வைத்தியக் கல்லூரிகளில் தேறியவர்களுக்கு, முதலில் ஜமேதார் பதவி வழங்கப்படும். இவர்கள் படையில் சேர்ந்தவுடனே ரசில்தாராக உயர்த்தப்படுவார்கள், 12 மாதங்களுக்குப் பிறகு, இவர்களுக்கும் 'எமெர்ஜென்ஸி கமிஷன்கள்' கொடுக்கப்படும்.

இந்த இராணுவ மிருக வைத்தியர்களுக்கு ஒரு பொறுப்பான வேலை யுண்டு. தம் மேற்பார்வையிலுள்ள எல்லா மிருகங்களும் தகுந்தபடி எல்லாப் போர் முனைகளிலும் பயன் படும்படி வைத்துக் கொள்ள வேண்டியது இவர்களுடைய கடமை.

'ஆட்டம் க்ளோஸ்!'

ஜெர்மானியர் ருஷ்யாமீது போர் தொடுத்து இரண்டரை வருடங்களாகின்றன. ருஷ்யாவில் பெரும்பாகத்தை ஜெர்மானியர் பிடித்துக் கொண்டதும், அணை உடைந்த வெள்ளமென நாஜிப்படை ருஷ்யாவில் பல பகுதிகளிலும் பாய்ந்து புகுந்து முன்னேறிக் கொண்டிருந்ததும், மாஸ்கோ நகருக்கு ஆபத்து வந்து விட்டதென ருஷ்ய அரசாங்கத்தார் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு முந்நூற்றைம்பது மைலுக் கப்பால் ஓடினதும், மாஸ்கோ நகர்மீது குண்டுகள் விழுந்ததும், 'ருஷ்யா பாடு தகராறுதான்' என்று உலகோர் எண்ணியதும், இப்பொழுது வெறுங் கதை போலாகிவிட்டது. கணக்கு வழக்கில்லாமல் பயங்கரமாக நாஜிகள் கொடுத்ததையெல்லாம் அருமைப் பொறுமையுடன் வாங்கிக் கொண்டு, கொடுத்த வட்டியும் முதலுமாக அத்தனையையும் ருஷ்யர்கள் நாஜிகளுக்குத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருப்பதும், 'ஐயோ இவ்வள்வு கொடுக்கிறாயே, தாங்கமுடியல்லே! தாங்கமுடியலையே!' என்று சொல்ல உடம்பு தூண்டினாலும், வெட்டி ஜம்பத்துக்கு ஆசைப்படும் அந்த எழவு மனசு, அமுக்கி வைத்துக் கொண்டிருப்பதும் தான், கண்ணெதிரே தோன்றுகின்றன. சிறுபிள்ளைத் தனமாக வைக்கோற் போரில் தீவைத்து விட்டு வேடிக்கை பார்த்த பையன், போலீசாரால் பிடிக்கப்பட்டு, சவுக்கடி தண்டனை பெறும்பொழுது எப்படிச் சுருண்டு சுருண்டு விழுந்து துடிப்பானோ, அதேபோலத் தான், ஹிட்லரைத் தலைமையில் கொண்ட ஜெர்மனியும் உலக சமாதானமெனும் பெரிய வைக்கோல் போரில் யுத்தத் தீயை வைத்துவிட்டு, முதலில் ஆனந்தத் தாண்டவ மாடியது. அந்த வைக்கோல் போர், அடுத்தவீட்டுக் காரனுடையது தானே என்று அது முதலில் நினைத்தது. இப்பொழுது அந்தத் தீ ஜெர்மனியையும் பற்றத் தொடங்கி யிருப்பது கண்டு ஜெர்மன் மக்களே நடுங்கவேண்டி வந்திருக்கிறது. அதோடு, உலக சமாதானத்திற்குப் போலீஸார் போல விளங்கும் பிரிட்டிஷாரும், அமெரிக்கரும், ருஷ்யரும், தீமூட்டிய ஜெர்மனியைப் பிடித்துக் கொண்டு, கட்டிவைத்து அடிப்பதுபோல், நாலா புறங்களிலும், ஜெர்மனியைச் சூழ்ந்து கொண்டு, நொறுக்கித் தள்ளுகிறார்கள். ஜெர்மனி சுருண்டு சுருண்டு விழுந்து துடிக்கிறது அடி தாளாது. உலகம் முடியு மட்டும் மாறாத காய வடுக்கள் அதன் உடம்பில் பலமாகத் தோன்றப் போகின்றன. உலகையே எதிர்க்கத் துணிந்த வல்லமை பெற்றிருந்த ஜெர்மனி என்றொரு தேசம் ஐரோப்பாவில் இருந்ததா என்று எதிர்காலத்தவர் கேட்கும்படியான நிலைமைக்கு, பல்லைப் பிடுங்கிப் படுகிழமாக்கிக்கொண்டு உட்காரவைத்து விடவேண்டும் ஜெர்மனியை என்றே நேசதேசத்தவர்கள் எண்ணுகிறார்கள்.

குறுக்கு வழிகள் எவை ?

அதற்கான குறுக்கு வழிகள் என்ன ? சட்புட் என்று தண்டனைகளைக் கொடுத்து, தீயையும் சீக்கிரமே அணைத்து, நடுத் தெருவில் தீவிபத்து காரணமாகச் சிக்கித் தவித்து நிற்போருக்கு இருக்க இடமும், மனசிலே நிம்மதியும் பெற உதவுவதற்கான வகைகள் என்னென்ன இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கவே தான், சென்ற இரண்டு வாரங்களுக்குள்ளாக, இன்றைய தேதியில் இவ்வுலகிலேயே பெரிய நேசதேச வல்லரசுகளாகக் கருதப்படும் பிரிட்டன், ருஷ்யா, அமெரிக்க, சைனா ஆகிய நான்கு நாடுகளின் தலைவர்களும், முறையே வட ஆப்பிரிகாவில் உள்ள கெயிரோ நகர் அருகே ஓரிடத்திலும், அப்பால் பாரசீக நாட்டிலே டப்ரிஸ் என்ற ஊரிலும் சந்தித்து, எல்லா விஷயங்களையும் அலசிப் பார்த்து, திட்டமான முடிவுகளை அடைந்திருக்கிறார்கள்.

இந்த கெய்ரோ, டப்ரிஸ் மகாநாடுகள் உலகோரையே பிரமிக்க வைத்திருக்கின்றன. உலகோரில் நேசதேசத்தவர் பக்கமுள்ளவர்கள் இந்த மகாநாடுகளைப்பற்றி யறிந்து ஆனந்தங் கொண்டிருக்கின்றனர். நேச நாட்டினரிடை யுத்தத்தைச் சீக்கிரமே ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஒன்றுபட்ட எண்ணம் தோன்றியிருப்பதறிந்து பொது ஜனங்கள் உத்சாகங் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அச்சுநாடுகளில் உள்ள மக்களுக்கும், அவர்களின் தலைவர்களான ஹிட்லருக்கும், டோஜோவுக்கும் இந்த மகா நாடுகளின் முடிவுகள் பெருந் திகிலையே உண்டாக்கி யிருக்குமென்பதில் சந்தேகமே வேண்டாம்.

தலைவர்கள் கூட்டமும் ஏகோபித்த முடிவும்

மேற்கண்ட நான்கு வல்லரசுகளும் கைவீசிக் கொண்டுவந்து, ஒருவரையொருவர் சந்தித்துவிட்டு, டீயும், விருந்தும் சாப்பிட்டு விட்டுப் போய்விடவில்லை. ஒவ்வொரு தலைவரும், ஏகப்பட்ட ராணுவ, கப்பற்படை, விமானத் தலைவர்களோடும், முக்யமான மந்திரிகளோடும், பிரமாதமான புள்ளி விவரங்களோடும் வந்திருந்தார்கள். தலைவர்கள் ஒரு புறமும், மற்ற இலாகாத் தலைவர்கள் தனியாகவும் கூடி, மனம் விட்டுப் பேசி, ஒரு ஏகோபித்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

சீனத் தலைவரான சியேங்கே ஷேக்கும், அவரது வீர மனைவியும் வட ஆபிரிகாவில், முதன்முறையாக ரூஸ்வெல்ட்டையும், சர்ச்சிலையும் சேர்ந்து சந்தித்தார்கள். 'ஜப்பானின் முதுகுத் தோலியை உரித்து எடுத்து விடுகிறோம், பயப்படாதிர்கள். அதர்ம யுத்தத்தில் தலையிட்டதோ இல்லையோ அது, அதற்குத் தண்டனையாக, இந்த யுத்தத்தில் மட்டுமல்ல, நூறு வருஷங்களுக் குள்ளாக அது எந்தெந்த தீவுகளையும், நாடுகளையும் கைப்பற்றி யிருக்கிறதோ, அத்தனையையும் அதனிடமிருந்து பிடுங்கிவிடபிளான் போட்டிருக்கிறோம் திரும்பவும் எந்தக் காலத்திலும் ஜப்பான் தலையே தூக்கமுடியாது அதன் இடுப்பை ஒடித்துவிடுவோம். தென் கிழக்கு ஆசியாவிலும், சீனாவிலும் இருந்து ஜப்பானியரை சீக்கிரமே விரட்டவேணு மென்கிறீர்களா ? ஓ கே! அவசியம் செய்யலாம்.

சீனத்திற்கு பர்மா வழியாக உதவி

பர்மாவைக் கைப்பற்றி, பர்மா ரஸ்தாவைத் திறந்துவைத்து, சீனத்திற்குத் தாராளமாக உதவியனுப்ப வேண்டுமென்கிறீர்களா ? அப்படியே செய்கிறோம். இதோ இந்தியாவைப் பாருங்கள். எத்தனை லக்ஷம் இந்திய வீரர்கள் யுத்தத்திற்குத் தயாராக உத்சாகத்தோடு நிற்கிறார்கள் பார்த்தீர்களா ? எத்தனை நூறு விமானங்கள் 'ரெடி' யாக இருக்கின்றன பாருங்கள். லூயி மவுன்ட்பாட்டன் பிரபு இதோ உங்களருகே நிற்கிறார் பாருங்கள், எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன என்று சொல்ல. பர்மாமீது எப்படி, நமது விமானிகள் இடைவிடாது குண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா ? எல்லாம் உமது விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தான் ஐயா!' என்று சர்ச்சில் சியாங்கே ஷேக்குக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறார் போலத் தோன்றுகிறது.

'அம்மா! நீங்கள் யோசிக்க வேண்டாம்! உங்களது வீரத்தைக்கண்டு நாங்கள் மெச்சுகிறோம், ஜப்பானை நாங்கள் லேசில் விடப்போவதில்லை. இதோ பார்த்தீர்களா நான் எப்படி வந்திருக்கிறேன் இங்கே என்பதை ? கடற்படை இலாகாப் பிரதிநிதிகளில் 58 பேர்களையல்லவா கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். எல்லா விஷயங்களையும் அக்கு வேறு, ஆணி வேறாகக் கழற்றிப் பார்த்து, திட்டமாக வெற்றி காண என்ன செய்யலாம் என்பது பற்றி ஒரு முடிவுகாண!

பஸிபிக் பிரதேசங்களில் எனது படைகள் ஓய்வு ஒழிவில்லாமல் ஏதாவது செய்துகொண்டே தானிருக்கின்றன. தொடர்ந்த வெற்றி என்ற மணிபாக்லை எங்களவர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள் என்பதைக் கவனித்திருப்பீர்களே! மெள்ள மெள்ள ஜப்பானை நெருங்கி வருகிறோம். நாங்கள் அயர்ந்திருந்த சமயம் பார்த்து, ஏகப்பட்ட தீவுகளையும் நாடுகளையும் ஜப்பானியர் பிடித்துக் கொண்டு விட்டார்கள் பாருங்கள். பெரிய மூங்கில் புதர், அதனருகே கத்தாழை, இலந்தை, தூதுவளை போன்ற முட் செடிகள் ஏராளமாக உண்டாகி யிருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவற்றையெல்லாம் அழித்து சுத்தம் செய்ய வேண்டியது வாஸ்தவந்தான். ஆனால் மெல்ல மெல்லத் தானே கை எட்டும் தூரத்தில் உள்ள கொடிகளையும், கிளைகளையும் வெட்டி வெட்டி எறிந்து விட்டு மரங்கள், புதர்கள், கொடிகள் ஆகியவற்றின் அடிகளை அணுகலாம். அப்புறம் தானே, அவற்றை வெட்ட முடியும்.

மண்டையிலடித்துக் கக்க வைக்க வேண்டும்

அதே போல, உங்கள் சீனாவையும், பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஜாவா, சுமத்ரா, பாலி, நியூகினியா, அப்புறம் மத்ய பஸிபிக்கில் பல தீவுகளை எல்லாம் கௌவிக் கொண்டிருக்கும் ஜப்பானியரது வாய்களிலிருந்து அப்பிரதேசங்களை ஒவ்வொன்றாக அவர்கள் மண்டையிலடித்துத் தானே கக்க வைக்க வேணும் ? நீங்கள் கவலைப் படாமல் பத்திரமாக ஊருக்குப் போங்களம்மா! இந்த கெயிரோ நகரில் நன்றாகத் தலை மயிர் வெட்டுகிறார்களா ? பிரமிட், ஸ்பிங்க்ஸ் என்ற உம்மணா மூஞ்சிச் சிலை எல்லாம் பார்த்தீர்களா ? உங்களுக்குக் கூட கண் வலி போலிருக்கிறது. பத்திரமாக ஊருக்குப் போய் விட்டு வாருங்கள். உங்கள் வீர புருஷரை முதன் முறை சந்தித்தது எனது பாக்கியந் தான். சீக்கிரமே இறுதி வெற்றியைக் கொண்டாட நாம் சந்திப்போம்! நமஸ்காரம் அம்மா!' என்று ஸ்ரீமதி சியாங்கேய் ஷேக்கினிடம் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அன்போடு தெரிவித்திருக்கக் கூடும்.

திருப்தியோடு சியாங்கே ஷேக் தம்பதிகள் சீனத்திற்குத் திரும்பி விட்டார்கள். அவர்கள் பத்திரமாகப் போய்த் திரும்பிப் பறந்து வந்ததை எண்ணி, சீமை மக்கள் அளவிலா ஆனந்த மடைந்திருக்கிறார்கள்.

சீனத் தலைவர் சென்ற பிறகு, சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் தான், ஸ்டாலினை பாரசீக மண்ணில் சந்தித்தார்களே!

ஜெர்மன் யுத்தத்தை எப்படி முடிப்பது ?

ஜெர்மன் யுத்தத்தை எப்படி முடிப்பது என்பது பற்றி அவர்களும் பேசி முடித்தாயிற்று. "பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் இங்கிலாந்திலிருந்து கிளம்பி, மேற்றிசையில் ஐரோப்பாவி லிறங்க வேண்டும். அதே சமயம் மத்ய தரைக் கடல் பிரதேசத்திலிருந்து பால்கன் நாடுகள் மீது ஒரு பகுதியினர் கை வைக்க வேண்டும். நானும் இருபது லக்ஷம் புதுப் படைகளை கிழக்கே யிருந்து புது பலத்தோடு முடுக்கி விடுகிறேன். அதோடு ஆட்டம் 'க்ளோஸ்'. ஜெர்மனி அப்புறம் உருப்படுவது ஏது ?' என்று ஸ்டாலின் கூறியிருக்கிறார் என்று தோன்றுகிறது.

"ஜெர்மனி தோற்கடிக்கப்பட்ட பின், அதனிடமுள்ள ஆயுதங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அதனை மொட்டையாக்கி நிறுத்திவிட வேண்டும். அவ்வாறு மொட்டையாக நிற்கும் ஜெர்மனியை, பிரிட்டிஷ், அமெரிக்க, ருஷ்ய வல்லரசுகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சபை ஆளவேண்டும். ஜெர்மன் மக்களின் உள்ளங்களிலிருந்து நாஜிப் பித்துப் பூரணமாக அகலும் வரை, இந்த சபை அங்கேயே இருந்து வேலை செய்ய வேணும். நிபந்தனையின்றி இப்பொழுதே ஜெர்மனி சரணடைந்தாலும், அதோடு கசா முசா என்று பேசத் தொடங்கக் கூடாது. இப்பொழுது தலை தப்பட்டும்: திரும்பவும் சமயம் வரும், அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று ஜெர்மானியர் நினைப்பார்கள். அவர்களை இப்படியே விட்டு விட்டால் இன்னும் ஒரு இருபத்தைந்து வருஷங்களுக்குள் இன்னொரு மகா மக யுத்தம் ஆரம்பமாகக் கூடும். ஆகவே, ஓங்கித் தான் அடிக்க வேண்டும்" என்று சர்ச்சில் அபிப்பிராயப் பட்டிருக்கக் கூடும்.

ஜெர்மனியின் மரண சாசனம்

எல்லா விஷயங்களையும் மேற்கண்ட மூன்று தலைவர்களும் கூடி நன்றாக ஆலோசித்து, ஜெர்மனிக்கு ஒரு மரண சாஸனம் தயாரித்து விட்டார்கள். நாஜிஸத்தைக் கொல்லுவது எப்படி ? அதைக் குழியை வெட்டிப் புதைப்பது எப்படி ? அதன் மீது எப்படிப்பட்ட மரத்தை நடவேண்டும் ? என்பது பற்றியெல்லாம் திட்டமான முடிவுக்கு வந்து விட்டார்கள்.

இதைக் கண்டு ஹிட்லர் நிச்சயமாக விளக்கெண்ணெயை அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டவனைப் போல உட்கார்ந்திருப்பார் என்று நினைக்கிறோம். நேச தேசத் தலைவர்களிடை ஒற்றுமை ஏற்படாது என்று அவரும், நாஜிகளில் பலரும் நினைத் திருந்ததுண்டு. அவர்களிடை ஏதோ அபிப்பிராய பேத மிருப்பதாக எண்ணி, அந்தப் பிளவை அகலமாக்க நாஜிப் பிரசாரகர்கள் ஜகஜ்ஜால வேலைகளையெல்லாம் செய்த துண்டு. ஆனால், நேச தேசத் தலைவர்கள் கெய்ரோவிலும், பாரசீகத்திலும் கூடிப் பேசி, ஒருமனப் பட்ட முடிவை அடைந்தது ஹிட்லருக்கும், நாஜிகளுக்கும் பேரிடி போலத்தானிருக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

பனி காலம் முடிந்து, வசந்த காலம் ஆரம்பமாக வேண்டியது தான். ஏற்கெனவே பாழடைந்து கிடப்பதும், தினசரி நடக்கும் கட்டுப் பாடான பிரிட்டிஷ் அமெரிக்க விமானிகளின் குண்டுமாரிகளால் பாழாகி வருவதுமான ஜெர்மன் நகரங்களையும், ஜெர்மன் ஆதிக்கத்தில் உள்ள பிற நாட்டு மக்களையும் பிரிட்டிஷ் அமெரிக்க தரைப் படை, கடற் படை உதவியோடு தாக்கப் போகிற தென்பது முடிவாகி விட்டதாம். யுத்த காலத்திலும், அதற்குப் பின்னும் ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றாக, நேசமாகவே இருந்து வர வேண்டு மென்கிற விஷயத்திலும், பல தலை முறைகளுக்கு யுத்தம் தோன்றாத வகையில் ஒரு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற விஷயத்திலும், மேற் கண்ட மூன்று நாடுகளிடையிலும் ஒரு ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. இந்த உலகிலிருந்தே அக்ரமம், கொடுங் கோன்மை, அடிமைத்தனம், அடக்குமுறை, அதிக்ரமம் எல்லாம் ஒழிய வேண்டும் ; எல்லோரும் சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்பதை மூன்று வல்லரசுத் தலைவர்களும் அப்பட்டமாக அறிவித்து விட்டார்கள். ஜெர்மனியின் படைகளைத் தரை மூலமாகவும், நீர் மூழ்கிகளை கடல் வழியாகவும், ஆயுத உற்பத்தி சாலைகளை ஆகாயத்திலிருந்தும் தாக்கி அழிப்பதை, பிரமதேவனாலும் இனி தடுக்க முடியாது என்று

(8-ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் மக்களைப் பணயமாக்க ஜெர்மன் முயற்சி

(மிஸ்டர் ஏ. ஹமீத்)

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தன் ஏகாதிபத்தியப் பேராசையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு, பிடிவாதமாக முஸ்லீம் உலகத்தையே பணயமாக வைக்க ஜெர்மனி முயன்றது. இஸ்லாமிய விஷயங்களில் ஹிட்லர் அக்கரைக் கொண்டார். ஆதியில், அரபுகளையும் இந்தியர்களையும் சீனர்களையும் கீழ் நாட்டவர்களையுங் குறித்து இவர் மிக வும் கேவலமாகத் தான் பேசினர். ஆனல் யுத்தத்திற்கு ஜெர்மனி ஆயத்தம் செய்ய ஆரம்பித்த வுடனே, இந்த நிலைமையை அடியோடு மாற்றிக் கொண்டார். இப்படிப்பட்ட மனமாற்றம் இராணுவ, பொருளாதர, அரசியல் காரணங்களால்தான் ஏற்பட்டன. இஸ்லாமிய சம்மந்தமான எல்லாவற்றையும் அரபுக்கள் சம்மந்தமான எல்லாவற்றையும் அவர் ஆதரித்து, பிரிட்டிஷ் படைகளும் பிரஞ்சுப் படைகளும் சிதறிப் போகும்படி செய்து, ரஷ்யாவின் தென் பகுதியில் அச்சமுண்டாகும்படிச் செய்ய வேண்டு மென்பது தான், ஹிட்லருடை முயற்சி.

1880-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் 50 லட்சம் ஜெர்மன் மார்க்குகளைக் (ஜெர்மன் நாணயம்) கொண்டு துருக்கி முழுதும் பெரிய தோர் ரயில் பாதையைப் போட்டார்கள். முஸ்லீம் நாடுகளில் தம் பொருளாதாரச் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றனர். ஜெர்மன் அரசாங்க பாங்கியே இதில் பங்கு கொண்டது. ஹிட்லரின் படைகளைச் சேர்ந்த மோட்டார் வண்டிகளுக்குத் தேவையான எண்ணெய் மத்தியக் கிழக்கு நாடுகளில் இருக்கிறது.

பொருளாதார பிரவேசம்

ஹிட்லர் ஆட்சியின் கீழ் பொருளாதாரம் வெகுவாக விரிவடைந்தது. இதை நாஜிக் கட்சியினர் மிகவும் உரித்தாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். 1933-ம் வருஷத்தில், துருக்கி, இஜிப்ட், பாலஸ்டின், சிரியா, ஈராக், பெர்சியா ஆகிய நாடுகளிலிருந்து 167,300,000 மார்க்குகள் பெறுமானமுள்ள பொருள்கள் ஜெர்மனியில் இறக்குமதியாகின. ஆனல், 1937-ம் வருஷத்தில், 183,600,000 மார்க்குகள் பெறுமான பொருட்கள் இறக்குமதியாயின. அதுபோலவே ஜெர்மனியிலிருந்து, அந்நாடுகளுக்கு 1933-ம் வருஷத்தில் 81,500,000 மார்க்குகள் பெறுமானமுள்ள பொருட்கள் அனுப்பப்பட்டன. ஆனல் 1937-ம் வருஷத்தில் 25 கோடி மார்க்குகள் பெறுமானவை அனுப்பப் பட்டன. ஜெர்மன் வியாபார மெல்லாம் பொருள் இலாபத்தை அடிப் படையாகக் கொண்டில்லாமல், அரசியல் இலாபத்தையே அடிப் படையாகக் கொண்டிருந்தன.

1935-ம் வருஷத்தில், ஜெர்மனி, பெர்சியாவோடு ஒரு பண்டம் மாற்று ஒப்பந்தம் செய்து கொண்டது. அது முதல், பெர்சியாவில் ஜெர்மன் பொருளாதார நிலை வேரூன்றி விட்டது. 1939-ம் வருஷம் பெர்சியாவின் அந்நிய நாட்டு வியாபாரத்தில் ஜெர்மனி முதல் ஸ்தானம் பெற்று விட்டது. பெர்சியாவில் இறக்குமதியாகிற வற்றில் மூன்றில் ஒரு பங்குப் பொருட்கள் ஜெர்மனியிலிருந்து ஏற்றுமதியானவை. பெர்சியாவிலிருந்து ஏற்றுமதியாவதில் ஐந்தில் ஒரு பங்கு ஜெர்மனியில் இறக்குமதி யாயின. பெர்சியாவில் வியாபார விமானப் போக்கு வரவிற்கு ஏற்பாடுகள் செய்தவர்களும் ஜெர்மானியர்களே.

ஆப்கானிஸ்தானிலும் ஜெர்மன் வியாபாரம் 1935-ம் வருஷம் 1,800,000 மார்க்காக விருந்தது. 1939-ம் வருஷத்தில், 7,300,000 மார்க்காக உயர்ந்தது. இவ்வாருக 1939-ம் வருஷம் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே, மத்தியக் கிழக்கு நாடுகளில் ஜெர்மன் வியாபாரம் வேரூன்றி விட்டது. ஜெர்மனியி லுள்ள 5 பெரிய பாங்கிகளுள் ஒன்று ட்ரெஸ்ட்னர் பாங்கி. இதன் கிளைகள் கெய்ரோ, அலெக்சாண்ட்ரியா, இஸ்மீர் ஆகிய ஊர்களில் வேலை செய்து கொண்டிருந்தன. சீமன்சுக்கு "ஓரீண்ட்" கிளை யொன்றிருந்தது. க்ருப் ஓர்க்சுக்கு, எகிப்திலும் இஸ்தன்புல்லிலும் கிளைகள் இருந்தன. யுத்த ஆயுத வியாபாரிகளான ஹேகன்லாக்கர் அன் பின்லே, ஜப்பானில் வியாபாரம் நடத்தினர்கள். ஜெர்மன் கப்பல் கம்பெனி யொன்றும் தன் மத்திய கிழக்கு நாட்டுத் தலைமைக் காரியாலயத்தை போர்ட் செட்டில் அமைத்துக் கொண்டது.

பிரசார முயற்சிகள்

அதே சமயத்தில் மூன்ருவது ஜெர்மன் ரெய்ச் சபை இஸ்லாமிய நாடுகளில் பிரசாரத்தை நடத்துவதற்கு ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தியது. நாஜிகள் பணங் கொடுத்து, அரபிய தீவிரவாதிகளைக் கொண்டும், பத்திரிகைகளைக் கொண்டும், ரேடியோ மூலமாகவும், 1918-ம் வருஷம் நிறைவேற்றப்பட்ட ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டும் ஒப்பந்தத்தை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியமென்றும், உலகத்தில் "ஆங்கிலோ யூதர்களுக்குள்ள ஆதிக்கத்தை" அழிக்க வேண்டியது அவசியமென்றும் அரபுக்களிடையே பிரசாரம் செய்தனர். தம் வேலையை நிறைவேற்ற ஏராளமான ஜெர்மானியர்கள் முஸ்லிம் நாடுகளில் பலவகைத் தொழில்களின் பெயரால், வந்து சேர்ந்தார்கள். உள்ளூர்காரர்களில் சிலரையும் தமக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

முஸ்லிம் நாடுகளில் சரியான கையாட்களை பெரிலினுக்கு அனுப்பி, அங்கே அரசியல் கல்வி பெறச் செய்தார்கள். மற்றொரு வசதியும் இவர்களுக்கு ஏற்பட்டது. ஜெர்மானியர்களின் உதவியைக் கொண்டும் இத்தாலியர்களின் உதவியைக் கொண்டும் சிரியா அமீர் செக்கோப் ஆர்ஸ்லான் ஜினிவாவில் நியமித்திருந்த சர்வ அரபுக் கமிட்டியும் இதற்குப் பெரிதும் உதவியது. அரபு மெக்ரேப் பாதுகாப்புக் கமிட்டி, இஸ்லாம் மீட்சிச் சங்கம், அராபிய க்ளப், பெர்லின் முஸ்லீம் சங்கம் ஆகியவற்றிற்கு உதவியாக, பெர்லின் ஜெர்மன் இஸ்லாம் சங்கம் வேலை செய்தது. நாஜிக் கட்சியினர், தம் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் இஸ்லாம் மதத்தைத் தழுவ வேண்டுமென்றும் கட்டளையிட்டனர்.

ஹிட்லருடைய இந்த மாபெரும் போர்த் தந்திரமுறைக்கு உதவியாகப் பலவகை ஸ்தாபனங்கள் இஸ்லாமிய நாடுகளிலேயே உதவின, ஜெர்மனிக்குக் கல்வி பயிலப்போய், எல்லாவித வசதிகளையும் நலங்களையும் அனுபவித்த மாணவர்கள் தான் "நாஜிகளின் நல்லெண்ணத்தை"க் குறித்துப் பிரசாரம் தம் நாட்டில் செய்வதற்குப் பெரிதும் உதவினர்கள்.

நாஜிகள் தம் ஆதிக்கத்தை முஸ்லீம் நாடுகளில் நிலைநாட்ட எத்தனையோ வகைகளில் முயன்றும் பலிக்கவில்லை. பாசிஸம் முஸ்லீம் மதத்திற்கே முரணனது என்று உணர்ந்து கொண்டனர். இன்றுள்ள நிலைமையில் நேசநாடுகளை முஸ்லீம் நாடுகள் ஆதரிக்கின்றனவென்று கூறுவது மிகைபடக் கூறியதாகாது. நேசநாடுகள் வெற்றிபெற்ருல் தான், தமக்கு அரசியல் விமோசனம் கிடைக்குமென்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

அவர்கள் தெரியப்படுத்தி விட்டார்கள். அதோடு பாரசீக தேசத்தோடும் ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ருஷ்யாவிற்கு நெருக்கடியான காலத்தில் எல்லாம், யுத்த சாதனங்களை இதர நேச நாடுகள் ஈரான் (பாரசீகம்) வழியாகத் தானே அனுப்பின ?

ஜெர்மானியர் வீண் கனவு காண முடியாது

இனி மேலும் ஜெர்மானியர் வெற்றி பெறலாம் என வீண் கனவு கண்டு கொண்டிருக்க முடியாது. டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டது போல, 'அணையினுள்ளே ஏராளமான ஜலத்தை தேக்கிக் கொண்டாயிற்று ! இனி அதனைக் குபீரென்று பாய்ந் தோடச் செய்ய வேண்டியது தான் பாக்கி.'

ஒரு விஷயம் ! யுத்தம் ஆரம்பமாகி நாலேகால் வருஷங்களான பின்னும் ஜெர்மானியர் வலுவுடனே போராடிக் கொண்டே இருக்கிருர்கள். ருஷ்யாவில் ஓரிடத்திலே வெற்றியும் கண்டிருக்கிருர்கள். பாய்ந்து வரும் வெள்ளத்தை நிகர்த்துள்ள ருஷ்யப் படைகளை எதிர்த்துத் தாக்கவும் செய்கிருர்கள். இத்தாலியிலோ, எட்டாம் படையும், ஐந்தாம் சேனையும் வெகு சிரமத்தோடு தான் ஜெர்மானியரைத் தள்ளிக் கொண்டு முன்னேற வேண்டி யிருக்கிறது. இவற்றிலிருந்து ஜெர்மனியின் சக்தி இன்னும் நல்ல நிலைமையி லிருப்பதாகவே தோன்றுகிறது.

இருபது வருட காலமாக நாஜிகள் செய்த ஏற்பாடுகளை எளிதில் தகர்க்க முடியாது தான். யுத்த ஆரம்பத்திலே, அவர்கள் வெற்றி வெறி கொண்டு போராடினர்கள். இப்பொழுதோ, அழிந்து போகாமலிருக்க வேண்டுமே என்ற திகிலோடு பிசாசுகள் போல் போராடுகிருர்கள். எப்படியாவது யுத்தத்தை நீடிக்கச் செய்து, ஜெர்மனியை அது நெருங்க வொட்டாது தூரத்திலேயே நிறுத்தி வைத்து, ஒரு தினுஸாக ஏதாவது சமாதானம் செய்து கொண்டு தப்பிவிடலாம் என்று ஜெர்மானியர் எண்ணுகிருப் போலிருக்கிறது. அத்ற்கு நேச தேசத் தலைவர்கள் இடங் கொடுக்க மாட்டார்கள் என்பது டெஹ்ரான் மகாநாட்டு முடிவிலிருந்து தெளிவாகி விட்டது. ஜெர்மானியரின் வல்லமையை நன்குணர்ந்த ஸ்டாலினும், இதர ருஷ்யத் தலைவர்களும் திரும்பத் திரும்ப இரண்டாவது போர்முனைப் பல்லவியைப் பாடிக் கொண்டிருந் திருக்கிருர்கள்.

யுத்தத்தை வளர்க்கும் பூதம் ஹிட்லர்தான்

நேச தேசத் தலைவர்களிடை ஏற்பட்ட ஒற்றுமையைக் கண்டு, ஜெர்மானியரிடை பீதி ஏற்படத் தொடங்கி யிருக்கிறது ; நேசதேச குண்டு வீச்சுகள் ஜெர்மன் மக்களிடை கவலையை உண்டாக்கி யிருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பெர்லின் நகரை நூருவது தடவையாகத் தாக்கியதை, நேசதேச விமானிகள் சீக்கிரமே ஒரு விழாவாகக் கொண்டாடக் கூடும். பெர்லின் நகரிலோ, இப்பொழுது, 'சமாதானத்தைக் கோருங்கள், போதும் யுத்தம் !' என்று எழுதப் பெற்ற கடிதங்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ரகசியமாகவும், தொடர்ச்சியாகவும் மாற்றப்பட்டு வருகின்றனவாம். பெர்லின் நகர் மீது குண்டு வீசப் பெற்ற போது, அங்கே சிலர் கொள்ளை யடித்தார்களாம். அவர்களில் நால்வர் தூக்கிலிடப் பட்டார்களாம். ஹிட்லரைத் தூக்கி எறிய, சில தொழிற்சாலை முதலாளிகள் கூடி சதி செய்து கொண்டிருக்கிருர்களாம். யுத்தத்தை வளர்க்கும் பூதம் ஹிட்லர் தான் ; அந்த பூதம் ஒழிந்தால் தான், நாம் உருப்படியாக உலகில் நின்று, வியாபாரம் செய்து, பெய ரெடுக்கலாம் என்ற எண்ணம் அவர்களிடை ஏற்பட்டு விட்டாப் போலிருக்கிறது. பசுமரத் தாணிபோல், ஜெர்மன் மக்களின் ஹிட்லர் பக்தி ஆழமாகப் பதிந்திருந்த போதிலும், இப்போது நடக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்தால், அது ஆட்டம் கொடுத்துத் தானே போக வேண்டும் ?

ஜெர்மனி மீது சென்ற நவம்பரில் மட்டும் பதின்மூவாயிரம் டன் எடையுள்ள குண்டுகள் வீசப் பட்டிருக்கின்றன. அதனல் எவ்வளவு இடங்கள் பாழாகி யிருக்க வேண்டும் பார்த்துக் கொள்ளுங்களேன் !

ருஷ்யாவிலே ஜெர்மானியர் லெனின்கிராடுக் கருகில் உள்ள பண்ணைகளைக் கட்டுப்பாடான முறையிலே, சுட்டெரிக்கிருர்களாம். ருஷ்யர்கள் சீக்கிரமே அங்கு பாய்ந்து வரக் கூடும் என்ற பீதி, அவர்களது உள்ளங்களில் தோன்றி விட்டாப் போலிருக்கு ! அது நடக்காது என்று இப்பொழுது யாராவது தைரியமாகச் சொல்ல முடியுமா ஐயா ?

ருஷ்யர்களுக்குப் பலம் ஊற்றெடுக்கிறது

ஜெர்மானிய ரேடியோவில் என்ன சொல்லுகிருர்கள் தெரியுமா ? 'ஐந்து மாதங்களாக ருஷ்யாவில் கடும் போர் நடக்கிறது. ஆயினும் நமக்குச் சாதகமான முடிவு ஒன்றும் கண்ணில் படவில்லை. ருஷ்யரின் தாக்குதல் நாளுக்கு நாள் வலுக்கிறது. எங்கே யிருந்து தான் இத்தனை பலமும் அவர்களுக்கு ஊறிக் கொண்டிருக்கிறதோ தெரிய வில்லையே ! ஜெர்மனி இன்னும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வரலாம். ஆனல் சரணகதி என்ற விஷயம் ஜெர்மனியின் பெட்டி படுக்கைகளுக்குள் எங்கும் மறைந் தில்லை. அந்தப் பேச்சே நம்மிடம் கிடையாது. 1918-ம் வருஷத்தில் நடந்ததை ஜெர்மானியர் மறந்து விடுவார்களா என்ன ? ஆகாயத்திலிருந்து ஏற்பட்டுள்ள பெரிய ஆபத்தை ஜெர்மனி சமாளிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அடிக்கடி ஜெர்மானியர் ரேடியோவில் சொல்லி வருகிருர்கள்.

தோல்விகளால், வெற்றிக்குப் பெருமை

கொப்பல்ஸ் துரையின் டம்பப் பேச்சின் தினுசு கூட, இப்பொழுது மாறி இருக்கிறது. "யுத்தம் என்ருல் தோல்விகளே இல்லாமல், தொடர்ந்த வெற்றி மயமாகவே இருக்குமா என்ன ? வெய்யிலில் போனவனுக்குத் தானே நிழலின் அருமை தெரியும் ? தோல்விகள் சில இருந்தால் தானே, வெற்றியின் பெருமை விளங்கும் ? நாம் சில தோல்விகளை அடையா விட்டால், ருஷ்யர்கள் மகா பொல்லாதவர்கள் என்பது எப்படித் தெரியும் ? வெளி உலகிற்கு, கொஞ்சம் விட்டு பிடித்தால்தானே எதுவும் நன்ருக இருக்கும் ?" என்கிற மாதிரியில் பேசுகிருர் அவர்.

ஆனல், இனி ஜெர்மனி, வெற்றி என்பதையே காண முடியுமா என்பதே நமக்குச் சந்தேகம். மாஸ்கோ மகாநாடு, கெய்ரோ மகாநாடு, டெஹ்ரான் மகாநாடு இம்மூன்றும் ஆனபின் ஜெர்மனியின் வெற்றியைப் பற்றி நினைக்கவும் தோன்ற வில்லையே ஐயா ! மாஸ்கோ மகாநாட்டு முடிவு, "ஒரு பெரிய வாளை ஒருவனே நூதன பலம் பெற்று சுழற்றி வீசுவது போல் " என்று ஒரு அனுபவஸ்தர் சொன்னர். அது ரொம்ப வாஸ்தவம். ஒரு வாளைப் பலர் பிடித்துக் கொண்டால், ஆளுக் கொரு திசையில் அல்லவா திருப்ப முயலுவார்கள் ? அப்பொழுது எதிர் பார்த்த பலன் கிட்டுமா ? ஆனல் மேற்கண்ட மகாநாட்டு முடிவுகள் எதிர் பார்த்த பலனை கொடுக்கப் போகின்றன என்பது நிச்சயம். இதோடு ஜெர்மனியின் "ஆட்டம் க்ளோஸ்" ஆகத் தான் போகிறது. இந்த யுத்தத்தின் முடிவில் (லண்டனி லிருக்கும்)தென் ஆப்பிரிக்க பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ் கூறியது போல் பல பிரபல, நாடுகள் மறைந்தே போகப் போகின்றன. ஜெர்மனி வாயில்லாப் பூச்சியாக மாறும். ஐரோப்பாவிலே ருஷ்யாவின் வாக்கே பலத்த வாக்காக இருக்கும். ஆனல், உலகெங்கும் சமாதானம் பரவி நிற்கும் என்றே தோன்றுகிறது. அது தானே எல்லோரும் விரும்பும் இன்ப நிலை. அது எப்பொழுது வந்தெய்துமோ கச்சியே கம்பனே

அடிமை நாடுகள் மீள வழி

ஸ்டாலின் கலந்துகொண்ட முதல் மகா நாடு

துன்பத்தில் ஆழ்ந்து தவிக்கும் மக்கள் மீள வேண்டும். அறம் வளர வேண்டும். இன்பம் சிறக்க வேண்டும். உலகம் உய்ய வேண்டும். இவை ஜனநாயகத்தின் நற்பயன்கள். இவற்றை நாடி, நேச நாடுகள் முயலுகின்றன. அறத்தை எதிர்க்கும் அக்கிரமங்களை அடக்க, ஆயத்தமாகின்றன. இவை பற்றித் தான் சமீபத்தில் கெய்ரோவிலும் டப்ரீஸிலும் நேச நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். அவை பற்றி த. பா. நித்தியானந்தம் அவர்கள் சென்ற 6-ம் தேதி சென்னை வானொலி நிலயத்திலிருந்து ''யுத்த விமரிசம்'' என்னும் தலைப்பின் கீழ் ஒலி பெருக்கிய பிரசங்கமாவது :—

உலக மீட்சி. இது தான் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊன்றிக் கிடக்கும் ஆசை. இந்த ஆசை நிறைவேற்றப்பட வேண்டும். இது எளிதானதோர் வேலையல்ல. உலக அறிஞர்களின் மூளையை இது கிண்டிக் கிளறிக் கொண்டிருக்கிறது.

பல துளிகள் சேர்ந்தால் தான் பெரு வெள்ளம். பல கைகள் சேர்ந்து தட்டினால் தான் பெரும் ஓசை. அது போலவே, பல அறிஞர்கள் சேர்ந்தால் தான் நல்ல பலனுண்டு. பல அறிஞர்கள் சமீபத்தில் கூடினார்கள். ஒரு முறையல்ல. இரு முறை. முதலில், கெய்ரோவிலும், பிறகு டப்ரீஸ் என்னுமிடத்திலும் சந்தித்தார்கள். இந்த இரண்டு மகா நாடுகளும் மாஸ்கோ மகா நாட்டின் பயனாக ஏற்பட்டவை என்று சொல்லலாம். கெய்ரோ மகா நாடு மிகவும் முக்கியமானது, மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்டும் மிஸ்டர் ஷியாங்-கெய்-ஷேக்கும் கூடினர். இவர்கள் மட்டுமா ? அல்ல. அந்நாடுகளின் இராணுவத் தலைவர்களும் அரசியல் அறிஞர்களும் கூடினார்கள். முற்பகல்களில் இராணுவத் தலைவர்களும் அரசியல் அறிஞர்களும் கூடிப் பேசினார்கள். பிற்பகல்களில் அரசாங்கத் தலைவர்கள் கலந்து பேசினார்கள். இந்த மகா நாட்டை இரட்டை மகா நாடு என்று சொல்லலாம். இந்த மகா நாட்டின் நோக்கம், ஜப்பானின் கொட்டத்தை யொடுக்குவது தான். இதன் பொருட்டு, தரைப்படை, கடற்படை ஆகாயப் படை ஆகிய மூவகைப் படைகளையும் பயன்படுத்துவது என்று அங்கே முடிவு செய்திருக்கிறார்கள். இங்கே ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்த மகா நாட்டின் நடவடிக்கை யொவ்வொன்றும், குறிப்பிட்ட காலந் தாழாதபடி நிறைவேறின. இதைக் கொண்டு ஒரு விஷயத்தை, நாம் எளிதில் அனுமானிக்கலாம். தீர்மானங்களும் குறித்த காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்படும். அப்படிக் கொண்டுவரப் பட்டால், உலக மீட்சி விரைவில் உண்டாகும். உலக மக்களின் எண்ணம் ஈடேறும்.

மற்றொரு விசேஷம்

அந்த மகா நாட்டில் மற்றொரு விசேஷமுண்டு. இந்த மூன்று முதல்வர்களும் இங்கே தான் முதன் முதலாகக் கூடினார்கள். இந்த மகா நாடு மகா இரகசியமாகத் தான் நடைபெற்றது. இந்த மகா நாட்டில் விவாதிக்கப் பட்ட விஷயங்கள் உலக அமைதிக்கு அடிகோலுபவை. கிழக்கோடி நாடுகளிலும் பசிபிக் மகா சமுத்திரத்திலும், நேச நாட்டுப் படைகளின் கூட்டுப் போர்த் தந்திர முறைகளைக் கையாளுவது. இரண்டாவதாக, இந்தியாவிலிருந்து பர்மாவைத் தாக்கி பர்மா ரோடை மீண்டும் கைப்பற்றுவது; மூன்றாவதாக சீனப்படைகளுக்கும் பொது மக்களுக்கும் தேவையான பொருள்களைக் கொண்டு போய்ச் சீனாவில் சேர்ப்பது; நான்காவதாக யுத்தம் முடிந்த பிறகு, எந்த முறையில் சீனா மாற்றி யமைக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிப்பது, ஆகியவை தான் இம்மகா நாட்டில் பெரும்பாலும் விவாதிக்கப்பட்டன. இவற்றின் பொருட்டு, பிரிட்டனும் அமெரிக்காவும், எந்த அளவிற்கு உதவி செய்வது என்றும் விவாதித்தார்கள். பிரிட்டிஷார் சார்பில் மட்டும் 200 அறிஞர்கள் கலந்து கொண்டார்களென்றால், அம்மகா நாட்டின் பெருமையை என்னவென்று சொல்லிப் புகழ்வது ? சென்ற அக்டோபர் மாதம் நடைபெற்ற மாஸ்கோ மகா நாட்டிற்குப் பிறகு, ஜெர்மானியர்களின் கற்கோட்டைகள் என்று கருதப்பட்டு வந்தவை யெல்லாம், தவிடுபொடியாகிக் கொண்டு வருகின்றன. அது போலவே, கெய்ரோ மகா நாட்டிற்குப் பிறகு, ஜப்பானின் கல் கோட்டைகள் என்று கருதப்பட்டு வந்தவையும் தவிடு பொடியாகப் போகின்றன. இதற்கான திட்டத்தை இம்மகா நாட்டில் நிறைவேற்றி யிருக்கிறார்கள். ஜப்பானின் கொட்டத்தை யொடுக்குவது மட்டும் இம் மகா நாட்டின் நோக்கமல்ல. உலகிலுள்ள பல நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறித்தும், அரசியல் பிரச்சினைகளைக் குறித்தும், வெகுவாக விவாதித்தனர். இராணுவப் பிரச்சினைகளும், பொருளாதாரப் பிரச்சினைகளும் அரசியல் பிரச்சினைகளும் ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவை. ஆகவே, இந்த மூவகைப் பிரச்சினைகளையும் ஒருங்கு சேர்த்து விவாதித்து முடிவு கட்டுவதனால், சிறந்ததோர் பயன் ஏற்படும் என்பது உறுதி. அந்தப் பயனால், உலகம் உய்ய இடமுண்டாகும் என்றும் கூறலாம்.

டப்ரீஸ் மகாநாட்டின் தனிச் சிறப்பு

இரண்டாவது நடைபெற்ற மகா நாடு டேரானை யடுத்த டப்ரீஸ் என்னுமிடத்திலே நடைபெற்றது. இந்த மகா நாட்டிற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அதாவது, ரஷ்யத் தலைவரான பீல்ட் மார்ஷல் ஸ்டாலின் விஜயம் செய்திருந்தார். இது வரை நேச தேசத் தலைவர்கள் கூட்டிய எந்த மகா நாட்டிலும் அவர் கலந்து கொண்டதே கிடையாது. அப்போது, அவரே நேரில் விஜயம் செய்திருந்தார். இந்த மகாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது. கெய்ரோவில் நடைபெற்றது போலவே, இங்கேயும் இராணுவத் தலைவர்களும் அரசியல் அறிஞர்களும் உடனிருந்தனர். இந்த மகா நாடு சென்ற வியாழக் கிழமை முடிவடைந்தது.

இரண்டாம் போர் முனை ?

இரண்டாம் போர் முனையும் எப்படி, எங்கே, எப்போது ஆரம்பிக்கப்படுமென்றும், நடத்தப் படுமென்றும் முடிவு கட்டி யிருக்கிறார்கள். ஐரோப்பாவின் மேல் கரையிலிருந்து அமெரிக்கப் படைகள் தாக்கக் கூடுமாம். இது இரண்டாம் போர் முனையாக அமையக் கூடும். இந்தப் போர் முனை ஆரம்பமானால், ஜெர்மன் படைகள் ஒருங்கே சேர்ந்திருக்க முடியாது. சிதறி யிருக்கும்படி நேரும். மத்தியக் கிழக்கிலுள்ள நேச தேசப்படைகள், ரஷ்யப் படைகளுடன் சேருவதற்கு, பால்கன் நாடுகளை ஒரு வழியாகக் கொண்டு, ஜெர்மனியைக் கிழக்கிலிருந்தும் தாக்கக் கூடும். இது மூன்றாவது போர் முனையாக அமையும். ஆகவே, மேற்கிலும் கிழக்கிலும், நேச தேசப் படைகள் ஜெர்மனியை நெருக்கத் தான் போகின்றன. நாஜி ஜெர்மானியைப் பொசுக்கித் தள்ளிவிட வேண்டு மென்று இம் மகா நாட்டில் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டனர்.

நாஜிகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும் உள்ள வேற்றுமை

மார்ஷல் ஸ்டாலின் நாஜிகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும் வேற்றுமை கற்பிக்கிறார். கொடுங் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டுமாம். தற்போதுள்ள நாஜி ஆட்சி ஒழிந்து, உண்மை நல்லெண்ணமுள்ள ஜெர்மானியர்களைக் கொண்ட ஆட்சி முறை அமைய வேண்டுமாம். நெடுங் காலமாகக் கடுமையாகப் போராடி கஷ்டப்பட்டு, அலுத்துப் போயிருக்கும் ஜெர்மானியர்களுக்கு உள்ளூர மனோபலம் குறைந்து கொண்டு வருவது கண்கூடு. உடனடியாகச் சமாதானம் ஏற்பட வேண்டுமென்னும் அவா மேலிட்டுவிட்டது. ஆகவே, தமக்குள்ளாக ஒரு வகைப் பிரசார முறையைக் கையாண்டு வருவதாகத் தெரிகிறது. அம்முறைப்படி, ஒருவர், சமாதானத்தை நாடுவதாகத் தன் கருத்தைத் தெரிவித்து 10 அல்லது 20 கடிதங்கள் தன் நண்பர்களுக்கு எழுதுகிறார். அக்கடிதங்களின் இறுதியில், அக்கடிதத்தைப் போல் 10 நகல்கள் எடுத்து, அவரவர்களுடைய நண்பர்களுக்கு அனுப்ப வேண்டியது, அவர்களுடைய கடமை யென்று, அதில் குறிப்பிட்டிருக்கும். இவ்வாறாக அக்கடிதத்தின் நகல்கள் நாடெங்கும் பரவிக் கொண்டிருப்பதாகச் செய்தி எட்டுகிறது. ஆனால், டாக்டர் கொப்பல்ஸ் துரை, இவை எல்லாம் பிரசார ஏமாற்றங்கள் என்று வாய் கூசாமல் கூறுகிறார். இது வரை, நிச்சயமாக வெற்றி பெறுவோ மென்றும், தோல்வியே தமக்கில்லையென்றும் இறுமாந்திருந்த ஹிட்லர் கூறியதென்ன ? ஜெர்மனி, இந்த யுத்தத்தில் வெற்றியடையா விட்டால் ...... என்று பீடிகை போட்டு ஆரம்பிக்கிறார் பேச. இந்தச் சமயத்தில் ''கழுதை தேய்ந்து கட்டெறும்பு'' ஆன கதை நினைவிற்கு வருகிறது. இதிலிருந்து ஹிட்லரின் மனோ நிலையும் எவ்வளவு மாற்ற மடைந்திருக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. ஏன் மனம் மாற்ற மடையாது ? ருஷ்யாவோடு கடும் போராடியும் ஜெர்மனிக்குத் தோல்வி தான் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. இத்தாலியில் சாங்ரோ ஆற்றங் கரையிலும் தோல்வி தான். இங்கே நடை பெற்ற கடும் போராட்டத்தில், நான்காம் படையின் வீரதீரம் பெரிதும் பாராட்டக் கூடியது. குறிப்பாக, இந்தியப் படைகள், ஓயாத பெரும் மழையையும் வெள்ளத்தையும் பொருட்படுத்தாதபடி, மகா உக்கிரமாகப் போராடும் ஜெர்மன் படையினரை எதிர்த்து நின்று, போராடி அழியாப் புகழடைந்தன. இந்தியச் சேனைகளின் எதிர்ப்பைத் தாங்க மாட்டாமல், ஜெர்மன் படைகள் பின்னடைகின்றன. நிற்க, மற்றொரு செய்தியும் உலவுகிறது. சமீபத்தில் பான் பேபன், வாடிகன் நகருக்குப் போய், போப் அவர்களைக் கண்டார். இதைக் கொண்டு ஒரு ஊஹ்யம் கிளம்பி யிருக்கிறது. அதாவது, தம் சார்பாகச் சமரசம் பேசும்படி, போப் அவர்களைத் தூண்டும்

(11-ம் பக்கம் பார்க்க)

கிரேக்க மீட்சி வேண்டுகோள்

சென்னை கவர்னரவர்களின் உதவி அந்தரங்கக் காரியதரிசி 1943-ம் நவம்பர் 19௳ ஹெல்லனெஸ் அரசர் கிரேக்க மீட்சி வேண்டுகோள் தலைவருக்கு எழுதிய கடிதமாவது :—

1943-ம் நவம்பர் 15௳ மேன்மை தங்கிய சென்னை கவர்னரவர்கள் தலைமையில் நடை பெற்ற சென்னை மாகாண யுத்தக் கமிட்டிக் கூட்டத்தில் சென்னை கவர்னர் யுத்த நிதியிலிருந்து ஒரு லட்ச ரூபாய் கிரேக்க மீட்சி நிதிக்கு உதவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற தென்று தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிரேக்க மக்களின் துன்பங்களைப் போக்கும் பொருட்டு, உங்கள் கமிட்டியாரின் வேண்டு கோளுக் கிணங்கி, மனமுவந்தும் தாராளமாகவும் பொருளுதவி கிடைக்கு மென்று மேன்மை தங்கிய கவர்னரவர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

—

ஹெல்லனெஸ் அரசர் கிரேக்க மீட்சி வேண்டுகோள் தலைவர் 1943-ம் நவம்பர் 22௳ சென்னை கவர்னர் அவர்களின் உதவி அந்தரங்கக் காரியதரிசி அவர்களுக்கு எழுதிய கடிதமாவது :—

தங்களுடைய 19-ம் தேதிக் கடிதம் வரப் பெற்று பெரிதும் மகிழ்வடைகிறேன். கிரேக்க மீட்சி நிதிக்கு மிகத் தாராளமாக நன்கொடை யுதவிய உங்கள் நிர்வாகக் கமிட்டிக்கு எனது நன்றியை யறிவிக்கக் கோருகிறேன்.

இந்த வேண்டுகோள் வெற்றி பெற வேண்டு மென்பதில் மேன்மை தங்கிய கவர்னரவர்கள் கொண்டுள்ள அக்கரையைக் கண்டு என் மனம் பூரிக்கிறது. எமது கமிட்டியின் சார்பாக எனது நன்றியை அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டில்லியில் 1943-ம௵ அக்டோபர்மீ 18, 19, 20 தேதிகளில்

மேன்மை தங்கிய வைசிராய் பிரபு அவர்களை வரவேற்று மரியாதை குண்டுகள் போட்ட சென்னைப் படை

மேல் வரிசை :—டிரைவர் மகமத் இப்ராஹீம், பீரங்கிக்காரர் கோவிந்தன், பீ-ர். பக்கிரி ரெட்டி, பீ-ர். போப்ரையா, பீ-ர். ஈரண்ணு, பீ-ர். போக்கர், டிரைவர் கந்தன், டிரைவர் அப்பண்ணு, பீ-ர். குலாம் ஷெரீப்.

2-வது வரிசை :—பீ-ர். கருப்பையா சேர்வை, பீ-ர். மாரி, டிரைவர் பெருமாள், டி-ர். மாதவன் பிள்ளை, டி-ர். பி. ஜான், பீ-ர். ராமுலு, டி-ர். யோகன், டி-ர். முனுசாமி, டி-ர். முனுசாமி.

3-வது வரிசை :—டி-ர். வெங்கடராஜலு, பீ-ர். துரைசாமி, பீ-ர். வீராசாமி, மோட்டார் மெக்கானிக் வீரப்பா, பீ-ர். நரசிங்கப்பெருமாள், டி-ர். ராமசாமி, டி-ர். வீராசாமி, டி-ர். கோபால்சாமி, பீ-ர். எட்வின்.

4-வது வரிசை :—ஹவில்தார் கிருஷ்ணசாமி, டி-ர். நாராயணன், லான்ஸ் நாயக் கண்ணன், நாயக் அந்டோனி, லான்ஸ் நாயிக் சின்னப்பன், ஹவில்தார் துளசிதாஸ், ஹவில்தார் சுப்பையா பிள்ளை, ஹவில்தார் கோவிந்தசாமி, லான்ஸ் நாயிக் அனந்தன் பிள்ளை, நாயக் பெருமாள். டி-ர். வசீர்ஜான், ஹவில்தார் துரைசாமி.

நாற்காலியில் :—குவார்டர் மாஸ்டர் ஹவில்தார் அழகிரிசாமி, சார்ஜெண்ட் மண்டே, ஜமேதார் நாகலிங்கம், லெப்டினென்ட் அர்க்யூலஸ் ஐ.எ., **காப்டன் எப். ஜி. ப்ளெச்சர் ஆர்.ஏ.,** ட்ரூப் கமாண்டர் லெப்டினென்ட் ராம ராவ் ஐ.எ., ஜமேதார் நடேசன், ஹவில்தார் மேஜர் பாலையா, ஹவில்தார் கந்தசாமி.

தரையில் உட்கார்ந்திருப்பவர்கள் :—சிக்னல்மான் ஸ்ரீதரன் பிள்ளை, டி-ர். ராம செட்டி, பீ-ர். பொன்னுசாமி, பீ-ர். கோபாலன், டி-ர். மாரிகாடு, பீ-ர். சின்னப்பன், சிக்னல்மான் சாண்ட், வீரன், ஜி. எஸ். கோரன்.

ஜப்பான் விஷயம்

ஜப்பான் விஷயமா? அது தான் தெரிந்த விஷயமாச்சே! "ஆசியா மீது ஆதிக்கம் வகிக்க வேண்டு மென்ற அதனுடைய நைப்பாசை போகும் வரை அதை நையப் புடைப்பது" என்று தான் கெய்ரோ மகாநாட்டில் முடிவு கட்டி விட்டார்களே! "உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு, அதுவும் போச்சு அரோஹரா!" என்ற கதையாக ஜப்பான் எல்லாவற்றையும் இழந்து, இருந்த இடம் தெரியாமல் போகக் கூடும் என்றே படுகிறது. "அதிக ஆசை அதிக நஷ்டம்!", "புது வெள்ளம் வந்து பழைய தண்ணீரையும் அடித்துக் கொண்டு போச்சு!", "அரசனை நம்பி புருஷனை விட்டு, அரசனும் புருஷனும் ஆத்தோடே போனுங்க!" என்ற பழமொழிகளை எல்லாம் ஜப்பானியர் தமது நினைவிற்குக் கொண்டு வந்து, கண்ணீர் வடிக்கும் காலம் நெருங்கிக் கொண்டே வருகிறது என்று தான் தோன்றுகிறது.

அமெரிக்கப் பருந்துப் பாய்ச்சல் விமானங்களில் புது பீரங்கிகள் வைத்திருக்கிருர்களாம். அதன் அபார சக்தியைக் கண்டு, அதை உபயோகிக்கும் அமெரிக்கர்களே பிரமிக்கிருர்களாம். ஒரு விமானி ஒரு ஜப்பானியக் கப்பல் மீது அதன் மூலமாக குண்டுகளை வீசினராம். அந்த குண்டுகள் அந்த கப்பலின் மேல் பாகத்தை இருந்த இடமே தெரியாது அடித்து விட்டனவாம். இம்மாதிரி பல மிகுந்த ஆயுதங்கள் பல, தினசரி அமெரிக்காவில் சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பல விமானந் தூக்கிகள் தொடர்ந்து கட்டப்படுகின்றன. விமானங்களோ கணக்கில்லாது கட்டப்படுகின்றன. ஆட்களோ புற்றிலிருந்து புறப்படும் ஈசல்கள் போல் புறப்பட்டு வந்த வண்ணமாகவே இருக்கிருர்கள். நியூகினி, மார்ஷல், கில்பர்ட் தீவுகள், போகன்வில்லா தீவு ஆகிய பிரதேசங்களில் எல்லாம் அவர்கள் தங்கள் சமர்த்தை வெளிக் காட்டிக் கொண்டிருக்கிருர்கள்.

1944-ம் வருஷத்திலே பல இடங்களிலே பிரமாண்டமான கடற் போர்கள் நடக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அம்மாதிரி கடற் போர்கள் நடந்தால் தான், ஜப்பானின் பலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். கப்பற் படைகளை நம்பித் தானே ஜப்பான் காலை அகல வைத்திருக்கிறது! அந்த நம்பிக்கையில் மண்ணைப் போட வேண்டாமா?

போன ஞாயிற்றுக் கிழமை பட்டப் பகலில் கல்கத்தா மீது ஜப்பானிய விமானங்கள் படை யெடுத்தன. ராணுவத்தாருக்கும், ராணுவ இலக்குகளுக்கும் சேதம் ஒன்றுமே இல்லை எனலாம். ஆனால் கூலிகள் வசிக்கும் பிரதேசங்களிலே விழுந்த குண்டுகள், பாதுகாப் பறைகளுக்குப் போகாதிருந்த நூறு, நூற்றைம்பது கூலிகளைப் பலியாகக் கொண்டன. முந்நூறு, முந்நூற்றைம்பது பேர்களுக்குக் காயங்க ளுண்டாக்கின. நான்கு ஜப்பானிய விமானங்கள் நாசமாகி யிருக்கும் என்று தோன்றுகிறதாம். ராத்திரி வேளையில் போனல் எப்படி யிருக்கிறது கல்கத்தா ஊர் என்று பார்க்க முடிய வில்லை என பகலிலேயே ஜப்பானியர் வந்தாப் போலிருக்கு. ஏ அப்பா! குளிர் நிறைந்த கல்கத்தாவிலே கொதிப்பும் ஏகமாக இருக்கிறதே என்று தெரிந்து கொண்டிருப்பார்கள் அவர்கள்.

நம் நாடும்—உணவுப் பொருளும்

நல்ல நாடெனப்படுவது தனக்கு வேண்டும் உணவுப் பொருள் முதலான எல்லாப் பொருள்களையும் தன்னனகத்தே கொண்டு விளங்குவதாகும்.

"நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல
நாட வளந்தரும் நாடு"

இப்பெருமைக்கு ஏற்ற நாடு, நம் இந்திய நாடே. ஒரு நாட்டிற்கு ஏற்றம் தருவன உழவு, கைத் தொழில், வாணிபம் என்ற மூன்றுமே யாகும். நம் நாட்டின் பண்டைய சரித்திரத்தை நோக்குவோர், நம் நாடு இம்மூன்றிலும் ஏற்றம் பெற்றிருந்தமையைத் தெள்ளிதின் உணர்வர். ஆனல் இப்போது போரரக்கனது பேரிரக்கமற்ற செயலால், நம் நாடு இம்மூன்றிலும் குன்றிக் கிடக்கிறது.

மேலே கண்ட முத்தொழில்களிலும், நம் நாட்டின் உயிர் நாடியாய்த் திகழ்வது, உழவுத் தொழிலே. "கோதைவேல் மன்னவர் தம் குடை வளமும் கொழுவளமே" என்ருர் கம்பர். அரசனது ஆட்சியும் செம்மையுற நடைபெறவேண்டுமேல், உழவரது குன்ருமுயற்சி வேண்டப்படுவதாகும். உழவின் ஊதியமே மக்களின் பசிப்பிணிக்கு மருந்தாகும். இத்துணைச் சிறப்புற்ற உழவுத் தொழிலை ஓம்பாது, பல்லாண்டுகளாகப் புறக்கணித்திருந்த நாம், இப்போர்க் கொடுமையால் வாடுவதில் புதுமை யாதுளது? நம் நாட்டு மக்கள் யாவரும் ஒன்றுபட்டு, இவ்வுழவுத் தொழிலை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற காலம், இதுவே யாகும்.

நம் நாட்டு வேளாளரிற் பெரும்பாலர் முக்கிய உணவுப் பொருளாகிய நெல் போன்றவற்றைப் பயிரிடுவதோடு, தம் தொழில் நிறைவுற்றதாக எண்ணித் தம் வாழ்நாளை வறிதே கழிக்கின்றனர். இவர்களில் புன்செய்ப் பயிர்த் தொழிலைப் பற்றி எண்ணுவார் எத்தனைபேர் உளர்! உயிர் வாழ்க்கைக்கு அமுதமூட்டும் காய்கறித் தோட்டங்களை வளர்ப்பார் எவ்வளவினர்? அந்தோ! நீர்ப்பாசனம் முதலான வசதிகளை நம் அரசியலார் அளித்திருந்தும், நம் ஊக்கக் குறைவுகண்டு, அரசியல் அதிகாரிகள் தோட்டங்களை வளர்ப்பதற்கும் அடிகோல வேண்டியிருக்கிறதே! உணவுப் பொருள் பெருக்கத்திற்கெனப் பல இயக்கங்களைத் தோற்றுவிக்க வேண்டியிருக்கிறதே! நம் நாட்டவரின் ஊக்கமின்மைக்கு, நாம் யாது செய்வது?

உலகத்திற்கு உயிரூட்டும் வேளாளப் பெருந்தகையீர்! உமது புனிதமான தொழிலின் உயர்வைச் சற்று உன்னுங்கள். ஊக்கம் கொள்ளுங்கள். உழவுத் தொழிலை உயர்ந்த முறையில் நடத்துங்கள். தரிசு நிலங்களைத் தானியக் களஞ்சியமாக்குங்கள். அரசியலார் வேண்டிய துணை புரியக் காத்திருக்கின்றனர். ஏழைத் தொழிலாளிகளுக்கு வேலை கொடுப்பதனல் அவர்களது வறுமையை அகற்றுங்கள். புன்செய்த் தொழிலில் நெஞ்சு வையுங்கள். பருவமறிந்து படர் கொடியும் நிலை செடியும் நிரம்பும் காய்கறித் தோட்டங்களை அமையுங்கள். நாட்டின் பசிப்பிணி களையுங்கள்.

"உழுங்குலத்தில் பிறந்தாரோ உலகுய்யப் பிறந்தார்" என்ற அமுத வாக்கிற்கு உரியராகி வாழ்வீராக.

தேசீயச் சேமிப்புப் பத்திரம்

இராகம்—காம்போதி. தாளம்—சாபு.

பல்லவி

தேசீயச் சேமிப்புப் பத்திரம் கொள்ளுவோம்
நாசியைக் கொன்று தள்ளுவோம்—நலமது பெறவே இனி நாம் (தேசீ)

அனுபல்லவி

ஊசியே யாயிடினும் உறுதியாய் போரில் வெல்ல
உதவியே யாயிடும் நம் உள மகிழ்ந்தேயும் நல்ல (தேசீ)

சரணங்கள்

1. கருத்துடன் கையில் உள்ள காசுபணத்திற்கின்றே
வருத்தமின்றிப் பத்திரம் வாங்கில் வட்டியும் நன்றே
திருத்தமுடன் சேர்ந்தனு தினமும் பகையைக் கொன்றே
பெருத்த தொகையைப் பின்னர் பெருக்கி யுதவும் வென்றே (தேசீ)

2. பத்து ரூபாய்க்கின் றெரு பத்திரம் வாங்கில் வட்டி
பனிரண்டாம் ஆண்டில் கூடிப் பதினைந்து ரூபாய்க் கெட்டி
எத்தினம் வேண்டிடினும் கிடைக்கும் இல்லாமல் அட்டி
இத்தினம் போஸ்டாபீசில் ஏற்போம பணத்தைக் கொட்டி (தேசீ)

(9-ம் பக்கம் தொடர்ச்சி.)

பொருட்டுத் தான் அவர் அங்கே போனர் என்று ஒரு சிலர் கூறுகிருர்கள். ஜெர்மன் மக்கள் இன்றுள்ள நிலைமையை யொட்டி, இந்த ரஹஸ்யத்தை ஆராய்ந்தால், அது உண்மையாகவு மிருக்கலாம். தூரக் கிழக்கில், ஹிட்லரின் தோழரான டோஜோவும் பெரிதும் திண்டாடிக் கொண்டிருக்கிருர். தாம் கைப்பற்றிய இடங்களை யெல்லாம் நேச தேசத்தார் மீண்டும் கைப்பற்றி விடுகிருர்களே என்ற கஷ்டம் அவருக்கு இருக்கத் தானே செய்யும். என்ருலும், "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற்கு உதாரணமாக, ஜப்பானியர்கள் நேற்று கல்கத்தாவைத் தாக்கினர்கள். உடனடியாக, நேசதேச விமானப் படைகள் கிளம்பிப் போய், கடும் போராடி அவற்றை விரட்டி விட்டன. அங்கு நடந்த போராட்டத்தில் இரண்டு ஜப்பான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இனி, ஜப்பானியர்கள் இந்தியாவில் தலை காட்டத் தயங்கத் தான் செய்வார்கள். இப்போது நேச நாடுகளின் உற்பத்தி பலமும், ஆள் பலமும், மனோ பலமும், பொருள் பலமும் நாளுக்கு நாள் பெருகி, ஒப்புயர்வில்லாத நிலைமையை யடைந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் பயனாக, நேச நாடுகளின் கை ஓங்கும். துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் தழைக்கும். யுத்தம் விரைவில் முடிவடையும். நியாயம் வெற்றி பெறும், அடிமைப்பட்ட நாடுகள் மீட்சிபெற வழியுண்டாகும். விவசாயம் பெருகும். வியாபாரம் தலை தூக்கும், பொருளாதார நிலை ஓங்கும். மக்கள் இனிது வாழ, உலகம் ஏற்ற இடமாகும். அதுவே, உலக மக்கள் விரும்புவது.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

டிசம்பர் 1.—ஈராக் ரீஜெண்டுக்கும் வின்லித்கோ பிரபுவுக்கும் மன்னர் பிரான் பேட்டி கொடுத்தார்.

டிசம்பர் 2.—யுத்தத்திற்குப் பின் பாதுகாப்பு என்பது பற்றி பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் செய்ததோர் பிரசங்கம் பிரசுரமாகி யிருக்கிறது.

டிசம்பர் 3.—மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் ரூஸ்வெல்ட், பீல்ட் மார்ஷல் ஸ்டாலின் ஆகிய மூவரும் டன்பீரில் கூடி மகா நாட்டை ஆரம்பித்து விட்டனர்.

டிசம்பர் 4.—மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் ரூஸ்வெல்ட், மார்ஷல் ஸ்டாலின் ஆகியோர் சில நாட்களுக்கு முன் டேரானில் கலந்து பேசினார்கள் என்று மாஸ்கோ ரேடியோ அறிவிக்கிறது.

டிசம்பர் 5.—பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் 6 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை நாசஞ் செய்தன.

டேரான் மகா நாடு 4 நாட்கள் நடை பெற்ற பிறகு, சென்ற வியாழக்கிழமை முடிவுற்ற தென்றும் அப்போது 2-வது, 3-வது போர்முனைகளை ஆரம்பிப்பது பற்றி தெளிவான திட்டம் வகுக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

டிசம்பர் 6.—டேரான் மகாநாட்டு நடவடிக்கைகளைக் குறித்து நேச நாடுகளின் தலைவர்கள் ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள். ஈரான் சம்பந்தமாக ஒரு பிரகடனத்தையும் வெளி யிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

டிசம்பர் 1.—யு. என். ஆர். ஆர். ஏ. கௌன்சிலில், யுத்தத்திற்குப் பிறகு நேச நாடுகளுக்குள் ஏற்பட விருக்கும் கூட்டுறவு உண்மையிலேயே முதல் தரமான சோதனையாக அமையு மென்று உதவி மந்திரி மிஸ்டர் டீன் அச்சிசன் புகழ்ந்து பேசினார்.

டிசம்பர் 4.—பிரிட்டனில் அமெரிக்க ஸ்தானீகராயிருக்கும் மிஸ்டர் ஜான். ஜி. வினாண்டை, ஐரோப்பிய ஆலோசனைக் கமிட்டி யங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள்.

சீனர்கள் நீக்கச் சட்டத்தை ரத்து செய்ததைப் பாராட்டி ஸ்ரீமதி ஷியாங் கெய் ஷேக், அமெரிக்கக் காங்கிரஸ் சபைக்கு ஒரு செய்தி யனுப்பி யிருக்கிறார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

டிசம்பர் 2.—புது டில்லியில் உள்ள உணவுப் பொருள் இலாக்கா காரியாலயத்தை மேன்மை தங்கிய வைசிராய் பிரபு பார்வை யிட்டார்.

டிசம்பர் 3.—மௌண்ட் பாட்டன் பிரபு இந்தியாவிற்குத் திரும்பி வந்து தன் தலைமைக் காரியாலயத்தில் ஒரு மகாநாடு நடத்தினார்.

டிசம்பர் 5.—இன்று காலையில் ஜப்பானிய விமானங்கள் கல்கத்தாவை தாக்கின.

ரஷ்யாவும் பின்லந்தும்.

டிசம்பர் 1.—டினிப்ரோபெட்ரோப்ஸ்க்குக்குத் தென் மேற்கேயும், க்ரிவாய் ராக்குக்கு வட கிழக்கேயும் உள்ள ஜெர்மன் பாதுகாப்பு அரண்கள் வெகுவாகச் சுருங்கி விட்டன.

கொரஸ்டனை விட்டு ரஷ்யப் படைகள் காலியாகி விட்டன.

நரோபியா முதலிய பல ஊர்களை செஞ்சேனைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஷ்லோபினும், மோயியும் வீழ்ந்து விடும் போலிருக்கிறது.

ஸ்னெமெங்கா ஆபத்தான நிலைமையி லிருந்தது.

டிசம்பர் 2.—சோவியத் தாக்குதலைத் தாங்கமாட்டாமல், க்ரெமென்சுக்குக்குத் தெற்கேயும் தென் மேற்கேயும் ஜெர்மன் படைகள் பின் வாங்குகின்றன.

ஸ்னெமென்காவை ரஷ்யத் துருப்புக்கள் வளைந்து கொண்டன.

ஷ்லோபினையும் ரோகசேபையும் நோக்கி 3 திசைகளிலிருந்து ரஷ்யப் படைகள் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

டிசம்பர் 3.—ஒய்ட் ரஷ்யா போர் முனை எல்லாவற்றிலும் முதன்மையான டப்ஸ்க் ரோட், ஜெனரல் க்ளூக்கையி லிருந்து நழுவிக் கொண்டிருக்கிறது.

சோஷ், டினீப்பர் ஆறுகளுக்கிடையில் பல இடங்களில் ஜெர்மன் அரண்களை சோவியத் படைகள் புகுந்து கொண்டு முன்னேறின. கியெவைக் காப்பாற்றுவதற்கு அரும்பாடு படுகிறார்கள்.

செக்கோஸ்லோவியாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஏற்படப் போகிற ஒப்பந்தத்தின் சுருக்கம் பிரசுரமாகி யிருக்கிறது.

டிசம்பர் 4.—ஒய்ட் ரஷ்யாவை விட்டு ஜெர்மன் படைகளை வெளியேற்ற வேண்டி மகா மன உறுதி யோடும் பிடிவாதத்தோடும் செம்படைகள் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. ஷ்லோபினுக்குக் கிழக்கே ஜெர்மன் எதிர்ப்புக்கள் தடுமாறுகின்றன. ஸ்னெமென்கா ஆபத்தான நிலைமையிலிருக்கிறது.

டிசம்பர் 5.—ரோகசேபுக்கும் ஷ்லோபினுக்கும் 9 மைல் தூரத்தில் தான் செம்படைகள் இருக்கின்றன. மற்றொரு சோவியத் படை மொகிலேபுக்குத் தென் கிழக்கே 20 மைல்களுக்கு அப்பாலிருக்கிறது.

டிசம்பர் 6.—புதிதாகத் தாக்கக் கிளம்பிய பல இடங்களிலும் ரஷ்யப் படைகள் முன்னேறி யிருக்கிறார்கள்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

டிசம்பர் 1.—லான்ஷியானோ, காஸ்டெல் பெர்னாண்டோ, கசோலி ஆகிய இடங்களை 8-ம் படை கைப்பற்றி விட்டது. ஜெர்மன் மாரிகாலப் பாதுகாப்புக்களையும் சிதறடித்து விட்டது.

இத்தாலியிலும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் பசிபிக் மகா சமுத்திரத்திலும் இத்தாலியக் கப்பற் படைகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன வென்று இத்தாலியில் அறிவிக்கப்பட்டது.

டிசம்பர் 2 —ஜெர்மானியர்கள் பின் வாங்குகிறார்கள்.

பாஸ்கோ சேஷியா, ராமக்னோலி ஆகிய மலைகள் முழுவதையும் நேச தேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரோக்காசான் க்ரோயாணியும் கைப்பற்றப்பட்டது.

டிசம்பர் 3.—ரோமாபுரியை நோக்கி இரண்டு திசைகளி லிருந்தும் 5-ம் படையும், 8-ம் படையும் முன்னேறுகின்றன. காசில்பென்டானோ என்னும் இடத்தையும் மண்ட்காமரியின் படையினர் கைப்பற்றி விட்டனர்.

டிசம்பர் 4.—சானவிடோ நகரத்தின் வெளிப் பகுதிகளில் 8-ம் படை இருக்கிறது. கசோலி பிடிபட்டு விட்டது. 5-ம் படை பல மலையரண்களைக் கைப்பற்றியது.

இத்தாலியின் நேச நாட்டுக் கௌன்சில் முதன் முறையாகக் கூடியது.

டிசம்பர் 5 —8-ம் படையிட மிருந்து ஓர்சாக்னோ என்னு மிடத்தை ஜெர்மன் படைகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன.

மௌண்ட் காமினோவிலும். மௌண்ட்மக்கியோரிலும் பலமான ஜெர்மன் அரண்களை 5-ம் படை கைப்பற்றியது.

டிசம்பர் 6.—8-ம் படை மோரோ ஆற்றங் கரையை யடைந்தது. பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் 6 அச்சு நாட்டுக் கப்பல்களை மத்தியதரைக் கடலில் மூழ்கடித்தன.

இத்தாலியின் மாஜி அந்நிய நாட்டு மந்திரியான கௌண்ட் சியானோ கோர்ட்டுத் தீர்ப்பின்படி சுட்டுக் கொல்லப்பட்டார்.

விஷி, சுயேச்சை பிரான்சு எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

டிசம்பர் 1.—லெபனான் நிலைமையில் இதுவரை ஏற்பட்டுள்ளவை திருப்திகரமா யிருக்கின்றன வென்று காமன்ஸ் சபையில், அந்நிய நாட்டு இலாக்கா உதவி மந்திரி மிஸ்டர் ஜார்ஜ் ஹால் குறிப்பிட்டார்.

லெபனான் பார்லிமெண்ட் கூடிய போது, நேச தேசங்களையும், குறிப்பாக பிரிட்டனையும் போற்றி லெபனான் பிரதம மந்திரி பேசினார்.

டிசம்பர் 2.—கோபன்ஹேகனில் சுமார் 1 மணி நேரம் அபாயச் சங்கு ஊதியது.

மார்செய்ல்சிலுள்ள நீர்மூழ்கிக் கப்பல்கள் நிற்குமிடத்தை நேசநாட்டு வெடிகுண்டு விமானங்கள் கடுமையாகத் தாக்கின.

டிசம்பர் 4.—யுகோஸ்லாவ் கட்சியினர் ஒரு புதிய தற்காலிக அரசாங்கத்தை அமைத்துக் கொண்டனர்.

டிசம்பர் 5.—புதிதாக ஏற்பட்ட அரசாங்கத்தை ராயல் யூகேஸ்லாவ் அரசாங்கம் மதிக்க மறுக்கிறது,

நடு நிலைமை நாடுகள்.

டிசம்பர் 3.—பாரன் பான் பேபன் இன்று அங்காரா வந்து சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அங்காராவில் சென்ற 2 வாரங்களாக இருந்து வந்த ஜெர்மன் ஸ்தானீகர் எம். சேபத் அரிகன் நாளை பெர்லினுக்குப் புறப்படுவார்.

டிசம்பர் 4.—துருக்கித் தலைவர் இஸ்மெத் இனொனு, மிஸ்டர் ரூஸ்வெல்ட், மிஸ்டர் சர்ச்சில் ஆகியோரைக் கொண்டதோர் கூட்டம் ஒன்றை நடத்த, துருக்கி அரசாங்கம் ஆயத்தங்கள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. துருக்கித் தலைவர் இஸ்மெத் இனொனு கெய்ரோவுக்குப் போய்விட்டதாகவுந் தெரிகிறது.

டிசம்பர் 5.—அச்சு நாடுகள் மீது போர் தொடுத் திருப்பதாக பொலியா நாடு பிரகடனம் செய்து விட்டது.

டிசம்பர் 6.—வடாப்பிரிக்காவில் மிஸ்டர் ரூஸ்வெல்டும் மிஸ்டர் சர்ச்சிலும் துருக்கித் தலைவர் இஸ்மெத் இனொனுவுடன் கலந்து பேசியதாகத் தெரிகிறது.

தூரக் கிழக்கு நாடுகள்.

டிசம்பர் 1.—கெய்ரோவி லிருந்து வெளிவந்த அறிக்கை, மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் ரூஸ்வெல்ட், ஜெனரலாசிமோ ஷியாங் கெய்ஷேக் ஆகியோர் தம் இராணுவ நிபுணர்களுடனும் அரசியல் நிபுணர்களுடனும் வட ஆப்பிரிக்காவில் கூடிய மகா நாடு முடிந்து விட்டதென்றும், இனி ஜப்பானோடு எப்படிப் போராடுவது என்பது பற்றி விளக்கமாகத் திட்டமிட்டு விட்டதாகவும் அறிவிக்கிறது.

ஹுவான் தீபகற்பத்தைச் சேர்ந்த போங்கா என்னுமிடத்தை ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றி விட்டன.

நியூகினியிலுள்ள சியோ என்னு மிடத்தை நேச நாட்டுக் கப்பல்கள் குண்டுகளால் தாக்கின. க்ளூஸ்டர் முனையிலும் எம்பெரெஸ் அகஸ்டா விரிகுடாவிலுமுள்ள ஜப்பானிய விமான தளங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன.

அட்மிரல் மௌபிலேக் கொண்டோ, சீனக்கடல்களில் உள்ள ஜப்பானியக் கப்பற் படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டிசம்பர் 2.—ஷியாங் கெய் ஷேக் தம்பதிகள் சூங்கிங் வந்து சேர்ந்தார்கள்.

டிசம்பர் 3.—சீனப் படைகள் மீண்டும் லின்லி என்னு மிடத்தைக் கைப்பற்றின.

இரண்டு ஜப்பானிய நாசகாரிக் கப்பல்களையும் ஒரு டாங்கர் கப்பலையும் ஒரு போக்கு வரவுக் கப்பலையும் கெவியெங்குக்கு அருகில் நேச தேச வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

தான் ஜெனரல் மெக்கார்தரோடு கலந்து பேசியதைப் பற்றி ஆஸ்திரேலிய முதன் மந்திரி மிஸ்டர் கர்ட்டின் ஒரு அறிக்கை விடுத்தார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.